# அஞ்சலி

# ANJALI MAGAZINE

தீபம் - 04 சுடர் - 03 புரட்டாதி - மார்கழி - 2011




## உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

# 'அஞ்சலி'

## உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை


**ஆசிரியர்:** அருட்தந்தை.சூ.டேமியன் அ.ம.தி M.A
**துணை ஆசிரியர்:** அருட்தந்தை.இ.செ.விஜேந்திரன் அ.ம.தி
**ஒருங்கிணைப்பாளர்:** கி.துளசிதாஸ் (B.Sc)
**நிர்வாகக் குழு:** அஞ்சலியக பணியாளர்கள் , அஞ்சலி இளையோர் சமூகம்

**ஆலோசனைக்குழு:**

அருட் தந்தை இ.ஸ்ரலின், M.Sc
மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ், M.B.B.S
ஜோசப் பாலா
அருட் தந்தை பிலிப் அ.ம.தி
இ.து.குலசிங்கம்


## உள்ளே.....

பக்கம்


| | |
|---|---|
| ஆசிரியரின் சிந்தனையிலிருந்து | 01 |
| குழந்தைகளின் உளரீதியான வளர்ச்சியில்.... | 03 |
| மனிதன் மனிதனாய் வாழ | 08 |
| சிறகிழந்த பறவையென | 10 |
| வன்முறை | 12 |
| பூசைக்கேற்ற மலர் | 18 |
| சிறுவர்களாகிய நாம்தான் நாட்டின் பொக்கிசங்கள் | 21 |
| சிரிப்பு ஓர் பதுங்குகுழியா | 24 |
| மொழி ஒரு தொடர்புறுத்தல் சாதனம் | 26 |
| இறைவனின் அதிசய இணையத்தளம் | 28 |
| நல்லிணக்கமும் சமாதானமும் நிறைந்த இலங்கையை.... | 30 |
| அஞ்சலியத்தின் சிறுவர்தின கலைவிழா | 35 |
| உணர்வுகளின் ஊற்றுக்கள் | 36 |
| மாற்றியது நீயே | 39 |
| வானத்தை எட்டும் வாழ்வு வேண்டி... | 43 |
| பெற்றோரையும் ஏமாற்றி, எம்மையும் ஏமாற்றி | 44 |
| சிறுவர் சிறகை ஒடிக்காதீர் | 45 |
| தற்கொலை உணர்வுகளை கையாளும் வழிமுறைகள் | 47 |
| இளைஞர் தினம் | 51 |
| வாசகர் பார்வை | 52 |



**'ANJALI' Magazine,
Nellandai Road,
Thumpalai, Point Pedro,
Jaffna, Sri Lanka. Tel:
021 3217262**

விலை
35/=

**'அஞ்சலி' சஞ்சிகை,
நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே: 021 3217262**

# ஆசிரியரின் சிந்தனையிலிருந்து....



## "சுமைகள் சுகமானவைகளாக......"

சுமைகள் சுகமானவையாகத்தான் இருக்க வேண்டும். சுமைகள் சுகமானவைகளாக அமைகிறபோது தான் வாழ்க்கையின் சுமை கூடுகிறது. சுமைகள் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகைப் போன்றது. சுமைகள்தான் நாம் சாதனைபுரிய உறுதுணையாக இருக்கிறது. நாம் சுமையாகத்தான் இப்பூவுலகில் பிறக்கிறோம். அடுத்தவருக்கு சுமையாக இருந்த பிறகுதான் நாம் நல்லடக்கம் செய்யப்படுகின்றோம். ஒருவருக்கு மட்டும் சுமையாக தொடங்குகிற வாழ்க்கை இறுதியில் நால்வருக்கு சுமையாக முடிகிறது. இதுதான் வாழ்க்கையின் யதார்த்தம்.

சுமை என்று சொன்னாலே வருத்தத்தைக் கொடுக்கும். சுமை பாரமானது. அழுத்தக்கூடியது. சுமை என்பது துன்பம். ஒருவகையில் உலகில் எல்லோரும் துன்புறுகிறோம். இவ்வுலகில் துன்புறாதவர் எவருமில்லை. சுமை சுமந்து சோராதவர் யாருமிலர். எப்படியிருப்பினும் வாழ்க்கை யதார்த்தத்தை இப்படித்தான் என்று எதிர் கொள்ளுகின்றபோது அது சுமையாக அமைவதில்லை. நுகம் என்பது சக்கரம் பூட்டப்பட்ட வண்டியை சுலபமாக இழுப்பதற்கு குறுக்காக வைக்கப்படுகிற வழுவழுப்பான நீண்ட தடி. தமிழிலே மிக அழகாக 'நுகத்தடி' என்பார்கள். எவ்வளவு பாரமானாலும் மாடுகள் சுலபமாக இழுக்க நுகத்தடியில் அவற்றைப் பூட்டி ஓட்டுகிற போது அவ்வளவு சுமையையும் சுமந்து இலகுவாக இழுக்கிற பாங்கு நல்ல உதாரணம். அந்த நுகத்தடியும், உருளுகின்ற சக்கரங்களும் சுமைகளை சுகங்களாக்குகின்றன. பாரத்தை இலகுவாக்குகின்றது. சுமை என்பது எல்லோருக்கும் பொதுவானதுதான். ஆனால் சுமை என்பது மனிதருக்கு மனிதர் வேறுபடலாம். சிலர் அட்டைப் பைக்குள் சுமப்பதை தோள் பட்டையில் சுமக்கலாம். சிலர் தோள்பட்டையில் சுமப்பதை முதுகில் சுமக்கலாம். சிலர் முதுகில் சுமப்பதை தலையில் சுமக்கலாம். ஆனால் எல்லோருமே சுமக்கின்றோம். சுமக்கிற விதங்களில் வேண்டுமானால் அல்லது சுமக்கிற இடங்களில் வேண்டுமானால் மாற்றம் இருக்கலாம்.

வாழ்க்கை என்றால் ஆயிரமிருக்கும்
வாசல் தோறும் வேதனையிருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடிநின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதிவரைக்கும் அமைதி இருக்கும்................. என்ற கண்ணதாசனின்

பாடல் வரிகள் உண்மைதானே.

கிராமப்புறங்களில் 'சுமை தாங்கிக் கற்களை' சாலையோரத்தில் வைத்திருப்பார்கள். அந்தச் சுமைதாங்கி கல்லில் பாதையில் நடப்பவர்கள் நின்றவண்ணம் தாங்களாகவே சுமைகளை இறக்கிவைத்து விட்டு யாருடைய உதவியுமின்று தாங்களாகவே சுமந்து கொண்டு பயணம் செய்வர். அந்தச் சுமை தாங்கி ஒருவருடைய சுமையை சுகமாக்குகின்றது. இங்கே சுமைகள் சுகமாகிறது. சுமப்பவர்கள் சோர்வு நீங்கி தொடர் பயணம் மேற்கொள்ள புத்துணர்ச்சியை தருகின்றது. சுமைகள் சுகமாக மனிதத்தை நேசிப்போம். மற்றவர் சுகமாக வாழ நாம் சுமை தாங்கிகளாக மாற இறைவா எனக்கு சக்தி கொடு.

அன்பு வாசகர்களுக்கு இனிய நத்தார் புதுவருட பொங்கல் வாழ்த்துக்கள்.

-அருட்தந்தை. சூ. டேமியன்-

**அஞ்சலியகத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர்தின கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வுகளும்**



# குழந்தைகளின் உளரீதியான வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்



1. சமூகப்பிரிவு
2. சமூக கலாச்சாரக் காரணிகள்
3. பாடசாலைச் சூழல்
4. ஒத்த வயதினரின் செல்வாக்கு
5. பெற்றோர்கள்

**சமூகப்பிரிவு**

வர்க்க அடிப்படையிலும் வெள்ளை கறுப்பு என்ற அடிப்படையிலும் வேறுபாடுகள் உலகரீதியில் காணப்படுகின்றன. தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் வேலையாட்கள் அல்லது தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுதல் ஏழைச் சமூகத்தின் தாழ்ந்த நிலைப்பிள்ளைகளின் உள வளர்ச்சியை பின்னடையச் செய்கின்றது. உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சமூகப் பொருளாதார நிலையினால் வளர்ச்சிக்குத் தேவையான சகல சந்தர்ப்பங்களையும் பெறுகின்றது. பிள்ளைகளின் வளர்ச்சியும், வினைத்திறனும், நுண் அறிவும் சமூக வேறுபாட்டிற்கு அமையவே இடம் பெறுகின்றது.

**சமூக கலாச்சாரக் காரணிகள்**

சிரில் பர்டியின் ஆய்வில் 1937ல் கல்வியில் உள ரீதியான பின்னடைவிற்கு காரணங்கள் வறுமை, சனப்பெருக்கம், போர், குடும்ப அங்கத்தவர் தொகை, நோய், பெற்றோர்கள் கல்வியறிவின்மை ஆகியன குழந்தைகளின் உளரீதியான வளர்ச்சியில் காரணியாக அமையும் சமூக கலாச்சார காரணிகள் என இனங்காணப்பட்டது.

**பாடசாலைச் சூழல்**

5 வயது தொடக்கம் பிள்ளைகள் பாடசாலையை அணுகிப் போகின்றார்கள். பாடசாலைச் சூழலானது கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி, பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சியிலும், ஆளுமை மனவெழுச்சி வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பாடசாலையில்

ஆசிரியர்கள் ஒரு பிள்ளையை நடத்துகின்ற தன்மையினால் கூட பிள்ளையின் உளரீதியான வளர்ச்சி பாதிப்படையலாம். சில ஆசிரியர்கள் பிள்ளைகளை பாரபட்சமாக நோக்குகின்ற தன்மை என்பன ஒரு பிள்ளையின் உளரீதியான வளர்ச்சியில் தடைக்கல்லாக அமைந்துவிடுவதுண்டு.

**ஒத்தவயதினரின் செல்வாக்கு**

ஒரு பிள்ளை மூன்று நான்கு வயதை அடைந்தவுடனேயே ஒத்த வயதினரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வாறு இவர்கள் ஒத்த வயதினரை பாடசாலையிலும், அயலிலும் தேடிக் கொள்கின்றனர். ஆரம்ப முன் பள்ளியில் ஒத்த வயதினருடனும், ஏனைய ஐந்து வயதிற்குட்பட்ட சகபாடிகளைத் தேடிக் கொள்கின்றார்கள். பிள்ளை தமது அறிவு வளர்ச்சியினை ஒத்த வயதினரின் குழுச் செயற்பாடு, எதிர்பார்க்கை, பங்குபற்றல், உரையாடல் மனப்பான்மை, ஒழுக்கக் கட்டுப்பாடு, சமூகமயமாக்கல் போன்ற அம்சங்களின் மூலமும் பெற்றுக் கொள்கின்றனர். எனவே இந்தப் பருவமே ஏனையவற்றை அவதானித்துக் கற்கின்ற பருவம் என்பதால் மற்றவரை அவதானித்து தமது கற்றல்களை மேற்கொள்கின்றான். இங்கு தீய செயல்களை கற்கின்ற வாய்ப்பு இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**பெற்றோர்கள்**

பிள்ளைகள் பங்குபற்றுவதற்கான முதலிடம் குடும்பம். மற்றவரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் அதே வேளை, பிள்ளைகள் தமது கருத்துக்களை தெரிவிக்கக் கற்றுக் கொள்வதற்கான சிறந்த இடம் குடும்பமே.

குழந்தைப் பருவமே உள்ளத்திலே விடயங்களை நன்கு பதியும் காலமாகும். அக்காலத்தில் ஏற்படும் மனப் பதிவுகளே மனிதனின் வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றன. மனிதன் தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ளவனாக அமைவதற்கு அவனுடைய குழந்தைப் பருவ மனப்பதிவுகளும், ஆற்றல்களும் சீரானவையாக அமைய வேண்டும். இதற்கு குழந்தையினுடைய வளர்ச்சியில் பெற்றோரின் பொறுப்பு மிகமுக்கியமானது. அந்த வகையில் எரிக் எரிக்ஷனின் கருத்துப்படி குழந்தை வளரும் போது அதனது சமுதாயத் தொடர்பும், சிக்கலும் அடைகின்றது. எனவே சிறுவயதில் குழந்தைகளை சமூகத்திற்குள் ஈடுபட

வைப்பவர் பெற்றோரே. இதை விட சமூகத்தில் குழந்தை வளர்ந்தவுடன் ஈடுபாடு அடைவதற்கான அத்திவாரம் பெற்றோராலேயே மேற்கொள்ள முடியும் என்பது எரிக் எரிக்சனின் கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கலாம்.

குழந்தை பிறந்ததிலிருந்து பன்னிரண்டு வயது வரை பிள்ளைகள், பெற்றோரின் மனப்பக்குவத்தின் சூழலிலே வாழ்கின்றனர். எனவே தான் பிள்ளைகளின் உள மேம்பாட்டிற்கு அத்திவாரம் இடுபவராக பெற்றோரே முக்கிய பங்காளியாகக் கருதப்படுகின்றது. தாயும் தந்தையும் இணைந்து ஒரு பிள்ளையை எந்த விதமாக இருந்தாலும் உருவாக்க முடியும். எனவே பிள்ளை வளர்ச்சியில் பெற்றோர் மிகுந்த கவனத்துடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டியது அவர்களின் கடமையாகும்.

குழந்தையின் சுயாதீனத்திற்கும் உற்சாகமளித்தல் அடைவுகளை ஊக்கப்படுத்தல். உடல் நலத்தில் கவனம் செலுத்தல் என்பவற்றின் மூலம் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க முடியும்.

ஒருவனை ஊக்கிவிப்பதோ அல்லது தடுத்தோ செயற்படுத்தக்கூடிய ஆற்றல் சூழலுக்கே உண்டு. "மேதைகள் தோன்றுவதற்கு காரணம் நாட்டின் நல்ல சூழலே" என டிகாண்டேர் (De Candolle) கூறுகின்றார்.

வாட்சன் கூறுகின்றார்

"என்னிடம் உடல் நலமுள்ள சில குழந்தைகளைத் தாருங்கள். எத்தன்மை உள்ளவர்களாக அவர்கள் வளர வேண்டும் என்பதையும் முற்கூட்டியே சொல்லி விடுங்கள். அவர்களின் மரபு நிலை பற்றி எனக்கு கவலை இல்லை. சூழலின் உதவி கொண்டே பேரறிஞர்களாகவோ, பெருங் குற்றவாளிகளாகவோ அவர்கள் வளரும்படி செய்து காட்டுகிறேன்" எனக் கூறினார். எனவே அனுபவம், கல்வி பயிற்சி என்பன சூழல் வழியிலேயே மாற்றம் அடைகின்றது.

**குழந்தை அல்லது பிள்ளைகள் மட்டில் பெற்றோரின் நடத்தைப் பண்புகள் உளவியலில் பின்வருமாறு வகுத்து நோக்கப்படுகின்றது.**

1. குழந்தையின் சுயாதீனத்திற்கு உற்சாகமளித்தல்
2. குழந்தையின் தன்மதிப்பு உணர்வை வளர்த்தெடுத்தல்
3. பிள்ளையின் உடல் நலத்தில் கவனம் செலுத்தல்

4. கலாச்சாரம், சமயப் பண்புகளை வளர்த்தெடுத்தல்
5. எதிர்பார்ப்புக்கள் ஏதுமின்றி அன்பு செய்தல்
6. எல்லைகளை வகுத்தமைத்தல், ஒழுங்குக்கட்டுப்பாட்டில் உறுதி
7. நல்லதைச் செய்யும் வேளையில் பிள்ளையை பற்றிப்பிடித்துக் கொள்ளல் (பாராட்டுதல்)
8. விட்டுக் கொடுப்புக்களுடன் நெகிழ்வாய் இருத்தல்.
9. தெளிவான கருத்து தொடர்பாடலுக்கு முன்னுரிமை கொடுதல்.
10. நல்லதொரு முன்மாதிரியாக இருத்தல் (modoting)

இவ்வாறு பல வழிகளில் குழந்தைகளின் உள ரீதியான வளர்ச்சியை நிர்ணயிக்க வேண்டியவர்களாக பெற்றோர்கள் இருக்கின்றார்கள்.

**உயிரியல் காரணி**

குழந்தைகளின் விருத்தி - உயிரியல் மற்றும் சூழல் காரணிகளால் மலர்ச்சி கொள்கின்றது. குழந்தை உருவாகி தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கும் போதே அதன் வளர்ச்சியில் உயிரியல் செல்வாக்குச் செலுத்துகிறது எனலாம்.

கருக்கட்டி இரண்டு மாதம் ஆபத்து நிறைந்த பருவமாகும் தாய் கவனமாக இருக்க வேண்டும். பின்னர் இரண்டு மாதம் தொடக்கம், பிறக்கும் வரையான காலமே முக்கியமான காலப்பகுதியாகும். மரபணுக் களின் செயற்பாட்டால் குழந்தைகளின், நரம்புகளின் செயற்பாடுகள் மந்தமாகலாம். பரம்பரை வழியான நோய்கள் , குறைபாடுகள் என்பன மரபணுவின் ஊடாக கடத்தப்பட்டு குறைபாடுடைய குழந்தை பிறக்கலாம். **குறிப்பு:** தாய் கருவுற்றிருக்கும் போது போஷாக்கான உணவை உண்ணாது விடுதல். போதைப் பொருள் உள் எடுத்தல் போன்ற காரணிகளாலும் உடல், உள , மூளை விருத்தி குறைந்த பிள்ளைகள் பிறக்கலாம்.

**கலாச்சாரம் என்பது :** நாம் கண்டறிந்த வாழ்க்கை முறைக்கும் பழக்க வழக்கம், மார்க்க அனுஸ்ட்டானம், மொழியறிவு, சீவனோபாயம், அபிப்பிராயம், காலநுட்பம், மனப்பான்மை விழுமியங்கள் ஆகிய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியனவாகும். சமூகத்துடன் இணைந்ததாக கலாச்சாரம் காணப்படும்.

கலாச்சார முறை மதத்திற்கு மதம் இனத்துக்கு இனம் வேறுபட்டுக் காணப்படும். அவை குழந்தைப் பருவம் முதல் அவர்களுக்குப்

பெற்றோராலும் சமூகத்தாலும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு கலாச்சாரமும் ஒவ்வொரு மாதிரி அமைவதால் அவர்களின் சிந்தனை, மொழி, எண்ணம், படைப்பாற்றல், நுண்ணறிவு போன்ற அறிகைகளில் மாற்றத்தை உண்டாக்குகின்றது. அவற்றோடு பொருளாதார நிலை, சமூகப் பண்பாடு, கட்டுப்பாடுகள், ஆண் பெண் பாலாருக்கிடையிலான அன்னியோன்னிய தொடர்புகளும் அவர்களின் ஆற்றல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமைகின்றது.

கலாச்சாரமும் உளரீதியான வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது எனலாம்.

**குழந்தைகளின் உளரீதியான வளர்ச்சியில் பெற்றோரே முக்கிய காரணியாக காணப்படுகின்றனர்.**

குழந்தைகள் தனது செயற்திறன்களை வெளிக்காட்டும் இடம் குடும்பமே ஆகும். குழந்தை உட்காரவும் இருக்கவும், தவழ்ந்து செல்லவும், எழுந்து நிற்கவும், தத்தி தத்தி நடக்கவும் கற்றுக் கொள்கின்றனர். இங்கு விரும்பியவாறு செயற்பட இடம் கொடுக்க வேண்டும். குடும்பச்சூழலியற் காரணிகளான வசதிகள், சுத்தம், பாத்திரங்கள், நெருக்கம், குடும்ப உறுப்பினர்கள், மொழிப் பிரயோகம், உரையாடல், நடத்தைகள் போன்ற செயற்பாடுகள் குழந்தையின் உளரீதியான வளர்ச்சியை மேம்படுத்தும்.

கூட்டுக் குடும்பமாக வாழும் போது குழந்தைகள் எல்லோருடனும் கதைத்துப் பேசும் ஆற்றல்களையும் ஒவ்வொருவரும் செயற்படும் திறன்களையும் அவதானித்து கேள்விகள் கேட்டல், அவ்வாறே தானும் செய்ய முற்படுகின்றது. இவை குடும்பச் சூழலினால் உருவாகும். அவ்வாறு வயது முதிர்ந்தவர்களுடனும் உரையாடி அறிவைப் பெற்றுக் கொள்கின்றது.

**உசாத்துணை நூல்கள்:-**

திறந்த பல்கலைக்கழகம் கல்வி உளவியல்
சபா ஜெயராசா குழந்தை உளவியலும், கல்வியும்.
தி.கமலநாதன் சமூக அசைவியலும் சமூகக் கல்வியும்
(தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்)
திருமதி.ஜெ.இராசநாயகம் சிந்தனை
தயா சோமசுந்தரம், சிவயோகன் (தமிழ் சமுதாயத்தின் உளநலம் சாந்திகம்)
அல்போன்ஸ் மரிய வில்லியம் 1999 வளர்கின்றேன் நான் நலம்.

-இ.லோறன்ஸ் சுதா-
உளவளத்துணையாளர், அஞ்சலியகம்

# மனிதன் மனிதனாய் வாழ

1) நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள். (Ego)

2) அர்த்தமில்லாமலும், தேவை இல்லாமலும் , பின் விளைவு அறியாமலும், பேசிக் கொண்டேயிருப்பதை விட்டு விடுங்கள். (Loose Talks)

3) எந்த விசயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள். (Compromise)

4) சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள். (Tolerance)

5) நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள். (Adament Argument)

6) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindedness)

7) உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)

8) மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority complex)

9) அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)

10) எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

11) கேள்விப்படுகிற எல்லா விடயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விசயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.

12) உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய், இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)

13) புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

14) மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். (Misunderstanding)

15) பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத் தையும், பண்பையும் காட்டுங்கள்.

16) மற்றவர்களுக்கு உரிய மரியாதைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)

17) அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

18) பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன்வாருங்கள்.

19) எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்.

-த. கஸ்தூரி-
தும்பளை

## உங்களுடன் கொஞ்ச நேரம்,



"அஞ்சலி" புத்தகத்தின் முன் குறிப்பிட்ட வரைபடம் உங்கள் பார்வையில் எவ்வாறான சிந்தனை களை, கருத்துக்களை, உருவாக்கு கின்றது என்பதை எங்களுக்கு கவிதையாகவோ, கட்டுரையாகவோ, சிறுகதையாகவோ, அல்லது சிந்தனைத் துளிகளாகவோ 30.03.2012 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

# சிறகிழந்த பறவையென



சிறகிழந்த பறவையென
வலுவிழந்து நிற்கின்றோம்
தயவுடனே எமைத் தூக்க
தரணியிலே யாருமுண்டோ?

காலம் செய்த கோலத்தால் - சொந்த
காலை இழந்து நிற்கின்றோம்
கருணையுடனே எமை எழுப்ப
கற்றோரே யாருமுளரோ?

போரின் துயரத்தால் எம்மில் பலர்
பெற்றோரை இழந்து தம் இனிய
வாழ்வின் எண்ணங்களை சுமந்து கொண்டு
ஏக்கத்துடனே வாழும் நிலை கேளீரோ?

நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தாலும்
நம் இனிய நண்பர்க்கு அது கிடைக்காது
நல்லதொரு விடிழந்து எமை இங்கு
நடுத்தெருவில் விட்ட அவலம் யாரறிவார்?

சிரிக்கத் தெரிந்தும் சிரிக்க முடியாமல்
கதைக்கத் தெரிந்தும் கதைக்க முடியாமல்
சிறகிருந்தும் பறக்க முடியாமல்
சிறகிழந்த பறவைகளாய் நாமுள்ளோம்.

சிறுவர் உரிமை எமக்கு உண்டு
சீக்கிரமாய் அதை கொடுத்து விடுங்களென
சிந்தும் கண்ணீரையாவது பார்த்து
சிந்திப்பாரவர் எவருமுண்டோ?

பெற்றோர் ஆதரவில் நாமிருந்தும்
உற்றார் பலர் எமக்கிருந்தும்
நற்றமிழ் சிறுவர் எமக்கென
நற்பாதுகாப்பு எங்குளது?

இன, மத, மொழி பேதமின்றி நாமிருந்தும்
இன்னமும் நமக்கு பிரிவினை காட்டும்
இன்னும் பல வஞ்சகர்கள்
இப்போதும் இங்கு உள்ளாரோ?

பெண்களென்றால் பேயும் இரங்கும் - ஆனால்
நாயும் மதிக்காத நாட்டிலே - பெண்
சிறுவர் நாம் அன்றிலிருந்து இன்றுவரை
சிறைப்பட்டே காத்திருக்கிறோம் - விடுதலைக்காய்

சிறுவர்க்கு உரிமை வேண்டுமா என்றும்
சிலர் எழுப்பும் வினாக்களுக்கு
விடைகூறவேனும் எமக்கு
எள்ளளவும் உரிமையில்லையா?

எமது வாழ்க்கை என்ன காற்றில்
விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத்தலையணையா?
பார்ப்பாரெல்லாம் எமை பார்த்து நகைக்க
நாமென்ன இழிந்தவர்களா?

பஞ்சமா பாதகங்களையும் எவ்வித
பயமுமின்றி எமக்கிழைத்து விட்டோர்
தமக்கு மண்ணிலும் உயிரில்லை
விண்ணிலும் இடமில்லை என அறியாரோ?

நிம்மதி என்ற ஒன்றுக்காய்
நித்தம் நாம் படும் வேதனையை
நினைத்துப் பார்க்க வேணும்
நேரமில்லையா சொல்லுங்கள்

இன்ப வாழ்வை தராவிட்டாலும்
துன்ப வாழ்வை தர வேண்டாம்
இன்சொல் பேசா விட்டாலும்
வன்சொல்லை பேச வேண்டாம்

நமக்கெனவோர் பூமி வேண்டாம்
நல்லதோர் சுற்றமே போதும்
நல்ல பிள்ளையென நாமிருப்போம் - பெற்றோரே
நமக்குத் துணையாக நீரிருந்தால்

அடிமை வாழ்வு வேண்டாம் எமக்கு
ஆடம்பர வாழ்வும் வேண்டாம் எமக்கு
அழகிய சிறு வாழ்வு தனை
அனந்தமாய் தந்தால் அதுவே போதும்

தரணியைக்கூட தயக்கமின்றி - நம்
திறனைக்கொண்டு மாற்றியமைக்கும்
திறமைகூட எமக்கு உண்டு - எம்
தரத்தைக் கொஞ்சம் மதித்துப் பாருங்கள்

சிறகிழந்த பறவையென உள்ள எம்
சிறைப்பட்ட வாழ்வைக் கொஞ்சம்
சிந்தையுடனே திறந்து பாருங்கள்
செம்மையானதோர் உயர்வை நாம் தருவோம்.

**-த. கிருஷிகா-**
*யா/வடஇந்து மகளிர் கல்லூரி*

*****************************************************

# ஏழையின் நிலை

காலுள்ளவன் செருப்புக்கு அழும் போது
காலில்லாதவன் காலுக்கு அழுவதில் தப்பில்லை
ஆணவவெறியில் ஊசலாடும்
மனித மனம் இன்னும் புரியவில்லை
ஏழையின் வறுமையினை
பலருடைய கண்ணீரைத் துடைக்கப்
பலர் உண்டு - ஆனால்
ஏழையின் கண்ணீரைத் துடைக்க
யார் உண்டு

மனிதன் இன்னும் உறங்கவில்லை
நவீனத்துக்குள் மாய்ந்துள்ளது தன்னை
ஓ மனித உம் எச்சில்களே
அவர்களின் உணவாகட்டும்
இதைப் புரிந்து நட இது
மனிதம் பேசவில்லை மாண்பு
சொல்கிறது.

**வி. கபிலா**
தரம் - 10
லங்கா மாதாமடம், அச்சுவேலி

# வன்முறை

## ஓர் உளவியல் நோக்கு

(தொடர்...)

K.Gauthaman
Visitting Lecturer (Psychology)
Department of Philosophy
University of Jaffna.

6) பொருளாதார ரீதியான வன்முறை

பொருட்களைப் பதுக்கி வைத்தல், கலப்படம் செய்தல் போன்ற பொருளாதார வன்முறையைச் சார்ந்தவையாகும்.

7) பால்நிலை அடிப்படையிலான வன்முறை

ஒரு நபரின் பால்நிலையை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறை இதுவாகும். இதில் பெண்கள் சிறுவர்கள் மற்றும் ஆண்கள் போன்றோர் பாதிக்கப்பட்டாலும் குறிப்பாக பெண்களும், இளம்பெண்களுமே இதன் பாதிப்பிற்கு அதிகம் உள்ளாகின்றனர். இதனால் இது பெண்களுக்கு எதிரான வன்முறை எனவும் அழைக்கப்படுகின்றது.

8) அரசியல் ரீதியிலான வன்முறை

போர், ஆட்கடத்தல், சித்திரவதைக்குட்படுத்தல் (அரசியல் நோக்கங்களுக்காக) தேர்தல் காலங்களில் இடம் பெறும் வன்முறைகள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

9) கலாச்சார ரீதியான வன்முறை

கலாச்சாரத்தின் சின்னங்களாகிய மதம், மொழி, கருத்தியல், போன்றவற்றிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறை இதுவாகும். கோயில்களை இடித்தல், ஒருவனுக்கு ஒருத்தி என வாழும் கலாச்சாரத்தில் ஒருவர் மூன்று நபர்களை திருமணம் செய்தல் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

10) சமூக ரீதியான வன்முறை

பாரபட்சம் காட்டுதல், சமூகத்திலிருந்து விலக்கி வைத்தல், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுதல் போன்றன சமூக ரீதியான வன்முறைக்கு உதாரணங்களாகும்.

11) இயற்கைக்கு எதிரான வன்முறை

காடழித்தல், சூழலை மாசடையச் செய்தல் என்பவற்றின் மூலம் மனிதர்கள் இயற்கைக்கு எதிராகவும் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

இவற்றைவிட சாதி அடிப்படையிலான வன்முறை, இன அடிப்படையிலான வன்முறை, நிற அடிப்படையிலான வன்முறை, கல்வி ரீதியான வன்முறை, மருத்துவ ரீதியான வன்முறை, வேலைத்தள அடிப்படையிலான வன்முறை என வன்முறையானது பல வடிவங்களில் இடம்பெறுகின்றது.

## வன்முறைக்கான காரணங்கள்:

1) குடும்பக் காரணிகள் :

ஒரு குழந்தையானது சிறுவயதிலிருந்து தனது விருப்பங்கள், தேவைகள், உணர்வுகள் என்பவற்றை வெளிப்படையாக வெளிப்படுத்துகின்றது. குழந்தை வளர வளர பெற்றோர் தமது குழந்தைக்குச் சரியானதைச் சொல்லிக்கொடுக்கின்றோம் என்ற பெயரில் பிள்ளை தன்னுடைய உண்மையான உணர்வுகள், தேவைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் போது அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று குழந்தையைத் தடுக்கின்றனர். இதனால் குழந்தை தன்னுடைய தேவைகள் உணர்வுகளை அடக்கிக் கொள்ளும். இவ்வாறு அடக்கப்பட்ட உணர்வுகள், தேவைகள், விருப்பங்களால் வலி என்ற உணர்வு ஏற்படுகின்றது. இதன் மூலம் குழந்தை தன்னைத்தானே தண்டிக்கின்றது. இல்லையேல் மற்றவரை தண்டிக்கத் தொடங்குகின்றது. இது காலப்போக்கில் வன்முறையாக மாறுகின்றது. மேலும் குழந்தை பெற்றோரால் கடுமையாகத் தண்டிக்கப்படும் போதும் அது குழந்தைக்கு வன்முறை உணர்வைக் கற்றுக் கொடுக்கின்றது.

சிறுகுழந்தை, போலச்செய்தல் பின்பற்றலூடாக பலவற்றைக் கற்றுக் கொள்கின்றது. குடிக்கு அடிமையான தந்தை மதுபானம் பாவித்து விட்டு வந்து தனது தாயைத் தூசன வார்த்தைகளினால் திட்டுவதனையும், அடிப்பதனையும் குழந்தை பார்த்துக் கற்றுக் கொள்கின்றது. கற்றுக் கொண்டதை தனது நண்பர்களிடமும், தான் வாழும் சூழலிலும் பிரயோகிக்கின்றது. எனவே குழந்தை வன்முறையுடன் வளர்ந்து பெரியவனாகி வன்முறையாளனாக மாறுகின்றான்.

பெற்றோர் விவாகரத்துப் பெற்றிருத்தல், பெற்றோர் குழந்தையை அன்புடன் வளர்க்காமை, பெற்றோர் பிள்ளையிடம் காட்டும் வெறுப்பு, போன்றவை குழந்தை பின்னாளில் வன்முறை யாளனாய் உருவாவதற்கு வாய்ப்பாகின்றது. ஏனெனில் தன்னுடைய குடும்ப பிரச்சினைகளிலிருந்து விடுபட வன்முறை ஒன்றே வழி என இவர்கள் கருதி வன்முறையில் ஈடுபடுவார்கள்.

**2) சமூகக்காரணி**

சமூகத்தில் அநீதிகள் மேலோங்கும் போது சிலர் அதனைத் தட்டிக் கேட்கும் நோக்குடன் வன்முறையில் ஈடுபடு கின்றனர். சாதிரீதியாக பாகுபாடு காட்டி ஒதுக்கி வைக்கும் போது உயர்சாதியினருக்கும் தாழ்ந்த சாதியினருக்குமிடையில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறல் இதற்கு உதாரணமாகும்.

**3) பொருளாதாரக் காரணி**

வறுமை வன்முறையைத் தூண்டுகின்ற ஒரு காரணி யாகும். வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டவர்களில் சிலர் தமது வறுமையைப்போக்கிக் கொள்ள கொலை, களவு, கொள்ளை போன்ற வன் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

**4) அரசியற் காரணி**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் வன்முறைச் செயல்களில் ஈடுபடும் எண்ணம் சற்று அதிகமாகவே காணப்படும். அதாவது இவர்களில் பழிவாங்கும் உணர்வு மிகையாகக் காணப் படும். மேலும் இவர்கள் சொந்த இழப்புக்களையும், மற்றவர்களது இழப்புக்களையும் நேரில் கண்டவர்கள். இதன் காரணமாக இவர்கள் இலகுவில் வன்செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக இருப்பர்.

**5) உயிரியற் காரணிகள்**

பெண்களிலும் பார்க்க ஆண்களே வன்முறையில் அதிகம் ஈடுபடுகின்றனர். இதற்குக் காரணம் ஆண்களில் சுரக்கப்படும். தெஸ்தெஸ்தரோன் (Testesterone) என்னும் ஓமோன் ஆகும். இது வன்முறையைத் தூண்டும் ஓமோன் ஆகும். மேலும் மனித உடலில் செரரோனின் (Seratonin) என்னும் நரம்புக்கடத்தியின்

மட்டம் குறைவடையும் போதும் வன்செயல்களில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

இவற்றை விட விரக்தி, ஏமாற்றம், கல்வியறிவின்மை, அதிகரித்த மது போதைப்பொருள் பாவனை போன்றனவும் வன்முறைக்கான காரணிகளாக அமைகின்றன. எமது சமூகத்தில் வன்முறையைத் தூண்டுவதில் தென்னிந்தியத் திரைப்படங்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை பெரும்பாலும் வன்முறைச்சம்பவங்களைச்சித்தரிப்பவையாகவே காணப்படுகின்றன. இவற்றினை உள்வாங்கும் இளையதலைமுறையினரும் வன்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

**வன்முறையைத் தடுப்பதற்கான வழிமுறைகள் :-**

வன்முறை என்பது ஒரு சமூக நோய் ஆகும். எனவே அது குணப்படுத்தப்படலாம் அல்லது தடுத்து நிறுத்தப்படலாம். அதற்குப் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

1. வன்முறையற்ற தொடர்பாடலை மேற்கொள்ளல்

பல்வேறுபட்ட வன்முறைச் செயல்கள் இடம்பெறுவதற்கு அடிப்படைக் காரணம் தொடர்பாடலில் சீரற்ற தன்மை காணப்படுவதேயாகும். அதாவது கடுமையான வார்த்தைப் பிரயோகங்களினால் மற்றவரின் மனத்தைப்புண்படுத்தும் செயல்களே வன்முறைக்கு அடிப்படையாகின்றன. எனவே ஒரு விடயத்தையோ செய்தியையோ வெளிப்படுத்தும் போது இதயபூர்வமாகவும் , முழுமையாகவும், மற்றவரின் மனதைப் புண்படுத்தா வண்ணம் இனிய மொழியைப் பேசுவதன் மூலம் வெளிப்படுத்தும் அதேவேளை மற்றவர்களின் செய்தியை அல்ல கோரிக்கையை நாம் கேட்கும் போதும் முழுமையாகவும் உணர்வு பூர்வமாகவும் உள்வாங்குவதே வன்முறையற்ற தொடர்பாடலாகும். இது இதயம் திறந்த தொடர்பாடல் எனவும் அழைக்கப்படுகின்றது. வன்முறை இல்லாத அமைதிமிக்க , சமாதானம் நிறைந்த , நீதி நிலைநாட்டப்படுகின்ற ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டுமெனில் வன்முறையற்ற தொடர்பாடலே அதற்கு அடிப்படையாக அமையும்.

2) வடிகாலமைத்தல்

ஒருவருக்கு ஏற்படும் வன்முறைக்கு உணர்வுகளை பாதகமற்ற முறையில் அதாவது மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தாத வண்ணம் தீர்த்துக் கொள்ளும் அல்லது குறைத்துக் கொள்ளும் முறையே வடிகாலமைத்தல் எனப்படும். இது உளவியலில் கோட்டநீக்கம் (Catharsis) எனப்படுகின்றது.

அதாவது ஒருவருக்கு கோபம் ஏற்படும் போது தலையணையை குத்துதல் கோபத்தைக் குறைக்க உதவும். இதன் போது அவர் மற்றவருக்கு தீமை பயக்காமல் தனது வன்முறை எண்ணத்தைக் குறைத்துக் கொள்கின்றார்.

3) வன்முறையை ஏற்படுத்தும் மனவெழுச்சிகள் மேலோங்கும் போது அதற்கு மாற்றீடாக வேறொரு மனவெழுச்சித் துலங்கலைக் காட்டல் வன்முறையை குறைக்க உதவும். உதாரணமாக ஒருவருக்கு கோபம் ஏற்படும் போது நகைச்சுவை உணர்வுடன் கதைப்பதன் மூலம் கோப உணர்வைக் கட்டுப்படுத்தலாம்.

4) நெருக்கீடுகளைக் குறைத்தல்

பொருளாதார நிலையை உயர்த்துவதன் மூலம் குடும்ப மட்டத்திலும், சமூக மட்டத்திலும் நெருக்கீடுகளைக் குறைக்கலாம். இதன் மூலம் வன்முறையைக் குறைக்கலாம். ஏனெனில் பொருளாதார ரீதியான நெருக்கீடுகள் அதிகரிக்கும் போது சிறுவர் துஷ்ப்பிரயோகம், பாலியல் துஷ்ப்பிரயோகங்கள் என்பன அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

5) மது, போதைப் பொருள் பாவனையைக் குறைத்தல்

ஒரு சமூகத்தில் வன்முறையைத் தூண்டுகின்ற மிகமுக்கிய மான காரணி மது, போதைப்பொருள் பாவனையாகும். எனவே மது போதைப்பொருள் பாவனையைக் குறைத்தல், தடுத்தல் என்பனவற்றினூடாக பெருமளவில் வன்செயல்களைக் குறைக்கலாம். சமுதாய மட்டத்தில் மது போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்புகள் மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

6) ஊடகங்களைச் சாதகமான முறையில் பயன்படுத்தல்

ஊடகங்களில் வன்முறையைத் தூண்டும் செய்திகளை வன்முறையினைத் தூண்டும் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதை விடுத்து சமூகத்தில் நல்ல செய்திகளை வழங்கும் விதமாக தமது நிகழ்ச்சிகளை, செய்திகளைத் தயாரிக்க வேண்டும். இதன் மூலம் வன்செயல்களை ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்தலாம்.

7) சட்டங்களை நடைமுறைப்படுத்தல்

வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப் படுத்தலும் வன்செயல்களைக் குறைக்க உதவும். உதாரணமாக குடும்ப வன்முறையைக் குறைக்க குடும்ப வன்முறை தடைச்சட்டத் தைப் பிரயோகிக்கலாம்.

8) சார்ந்த வழிமுறைகளைக் கையாளல்

யோகாசனம் செய்தல், தியானத்தில் ஈடுபடுதல் போன்றன மனதை ஒருமுகப்படுத்துவதற்கு சிறந்த வழிமுறைகளாகும். எனவே இவற்றில் ஈடுபடுதல் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைக்க உதவும். சார்ந்த வழிமுறைகளை இளைஞர்களுக்கு கற்றுக் கொடுத்தல், அவற்றில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் போன்றன பயனுடையதாக அமையும்.

இவற்றினை விட ஆன்மீக விடயங்களில் அதிக நாட்டம் செலுத்துதல், சமூக சேவைகளில் ஈடுபடல் அனைவரிடத்தும் அன்பு செலுத்துதல் போன்றவற்றின் மூலம் வன்முறையில் ஈடுபடுவதிலி ருந்து தவிர்த்திருக்கலாம்.

எதனையுமே வன்முறையால் சாதிக்க முடியாது. ஏனெனில் வன்முறை வன்முறையைத்தான் பெற்றெடுக்கும். (Violence begets violence) எனவே ஒவ்வொருவரும் வன்முறை என்கின்ற ஆயுதத்தை கையில் எடுக்காமல் அகிம்சையுடன் வாழ்வதனூடாக வன்முறையற்ற புதியதோர் உலகத்தை உருவாக்கலாம்.

# பூசைக்கேற்ற மலர்

## (சிறுகதை)

தொடர்........

மீண்டும் படலை சத்தம் கேட்டு திடுக்கிட்டு கண்விழித்தார் பண்டிதர். அங்கே கணேஸ் வந்து நின்று "ஐயா! வாணி நிக்கிறாவோ? நோட்ஸ் கொப்பிகேட்டனான் அது தான் வாங்கலாம் எண்டு வந்தனான்" என்றாள்.

உலகநாதனின் உடுக்கடிச்சத்தம் உள்ளே படித்துக் கொண்டிருந்த வாணிக்கும் கேட்கத்தான் செய்தது. அந்தப்பயத்தால் கணேஸின் குரல் கேட்டும் வாணிவெளியே வரவில்லை.

பண்டிதரின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. அதுதான் அவரின் பண்பு "வாணி இஞ்சை கணேஸ் வந்திருக்கிறான்" என்றவர் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். வாணி கொப்பியை கொண்டு வந்து கணேசிடம் கொடுத்துவிட்டு உள்ளே போனாள். கணேஸ் கொப்பியை வாங்கிக் கொண்டு திரும்பிப்போக......

"தம்பி! கணேஸ் இஞ்சை கொஞ்சம்வா" என்றார் பண்டிதர் தனது கனிவான குரலில். புத்தகத்தை அடையாளம் வைத்து மூடிவிட்டு கணேசை நிதானமாக நிமிர்ந்து பார்த்தார் பண்டிதர். சிறிது மௌனத்தின் பின் "தம்பி! வாணியைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்" என்று கேட்டார். "ஐயா! வாணி நல்லாப்படிப்பா அவவின்ரை நோட்ஸ்சுகள்.... விடயத்தோடை தெளிவாய் இருக்கும் அவநல்ல கெட்டிக்காரி." என்றான் "சரி உங்களைப் பற்றி....." என்று பண்டிதர் முடிக்கமுன்னரே கணேஸ்.

"பொடியள் தேவை இல்லாமல் வம்புக்கதை கதைக்கிறாங்கள். நான் எவ்வளவு சொன்னாலும் அவங்கள் கேட்டபாடில்லை. ஐயா! எனக்கு வாணி தங்கச்சிபோலை. ஆர் என்ன சொன்னாலும் என்ன நோக்கம் எல்லாம் நல்லாப்படிச்சு என்ரை இலட்சியத்தை அடைய வேணும் எண்டதுதான்.

"என்ரை ஐயா எவ்வளவு கஸ்டப்பட்டு துறையுக்கை வெய்யில், மழை பாராமல் நிண்டு மாய்கிறார். அவர் என்னைப் படிக்கவைக்கிறது

எங்கடை சமூகம் என்னாலை நன்மை அடைய வேணும் எண்டுதான். என்று கூறி முடித்தவன் தொடர்ந்து, ஐயா உங்களுக்குத் தெரியும் தானை எங்கடை ஆக்களுக்கை எத்தனை பேர்படிச்சு உத்தியோகமாய் இருக்கினம். ஆனால் ஒருத்தர்கூட எங்கடை கிராமத்திலை இல்லை. தங்கடை சாதி தெரிஞ்சுபோடும் என்ற தாழ்வு மனத்தாலை தூர இடங்களிலை போய் இருக்கினம்.

தாங்கள் பிறந்த, தங்களை உயர்ததிவிட்ட சமூகத்தையும், செய் தொழிலையும் மறந்து போச்சினம். மறைக்கினம்... தாங்கள் பெரிசெண்டு எந்த இனத்தை நினைக்கினமோ அதுவாக மாறப்பாக்கினம். அவையள் நினைக்கிற...... ஏறப்பாக்கிற உயர்சாதி சமூகத்திலை இவையளுக்கு உதவியும் இல்லை. எங்கடை சமூகம் இவையளை மதிக்கப்போறது மில்லை எண்டது இவையளுக்கு விளங்குவதில்லை.

ஐயா, கொஞ்சம்படிச்ச எங்கடை பொடியள் தங்கடை தாய் தேப்பனுக்கு சொல்லுறமுதல் திருவாக்கு என்ன தெரியுமே "உந்தத் தொழிலை விடுங்கோ" என்பதுதான். அவையளும் விட்டுப்போட்டு நகைநட்டு காணி, பூமியை வித்துப் பட்டப்படிப்பு வரை படிப்பிச்சுவிட அவையளின்ரை பிள்ளையள் உத்தியோகம் வந்த உடனே.... வேறை பகுதியிலை காதலிச்சு கலியாணம் செய்து கொண்டு போய்விடுவினம். கடைசியிலை தாய், தகப்பன் பிச்சை எடுக்கிறதுதான்வழி......

ஏன் எங்கடை சின்னையா கிழவனைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். ஒரு மகன் பல்கலைக்கழக விரிவுரையாளர். மகள் வங்கியிலை, அவர்களைப் பெற்று ஆளாக்கிய புண்ணியவான் றோட்டிலை.

கணேசின் கண்கள் கண்ணீர்முட்டிமோதியது. சற்றுநேரம் அமைதியானான். பண்டிதர் தன்காற் பெருவிரலைப் பார்த்தபடி குனிந்த தலை நிமிராமல் அப்படியே இருந்தார்.

தளதளத்த குரலில் கணேஸ் தொடர்ந்தான். "ஐயா! எங்கடை சமூகத்தை நாங்கள் மதிச்சால்தான் மற்றவையளிடமிருந்து மதிப்பையும் மரியாதையையும் நாங்கள் எதிர்பார்க்கலாம்."

"என்ரை விருப்பம் எல்லாம் நான் நல்ல நிலைக்கு வந்து, எங்கடை சொந்தம் பந்தங்களுடன் சேர்ந்து வாழ்ந்து, எங்கடை சமூகத்தை நாலுபேர் திரும்பிப் பார்க்கிற அளவுக்கு உயர்த்த வேணும் எண்டதுதான்.

என்ரைஆசையையும், என்னைப் பெத்த தாய், தகப்பனின்ரை ஆசையையும் இன்னொரு சமூகத்திற்கு நான் ஒருநாளும் அடிமையாகமாட்டன்....ஐயா" என்றான் உறுதிபட.


"நான் படிக்கிறதுக்கு நீங்கள் எவ்வளவு உதவிகள் செய்திருக் கிறியள். அதை எல்லாம் நான் மறக்கமாட்டன் ஐயா." என்றவன் பண்டிதரின் காலைத்தொட்டு வணங்க கணேசின் கண்ணீர்த் துளிகள் பண்டிதரின் காலைச் சுட்டன.

அந்தக் கண்ணீர் துளிகளின் சூடு பண்டிதரின் மனத்தின் சலனத்திரையை விலக்கியது. பண்டிதர் சட்டென்று நிமிர்ந்தார். தன்னையும், அறியாமல் பண்டிதரின் கைகளுக்குள் கணேஸ்.... பூசைக்குரிய மலராகப் பண்டிதர் மனத்தில் பூசித்தார். பண்டிதரின் கைகள் கணேசின் தோளிலிருந்து விலக "நான் போட்டுவாறன் ஐயா" என விடை பெற்று நகர்ந்தான்.

அவனின் கையில் கொப்பி இருக்கவில்லை."தம்பி இஞ்சைவா" என்றவர் கொப்பியை எடுத்து வந்து அவன் கையில் கொடுத்து "ஆர் என்ன சொன்னாலும் சொல்லட்டும் நீங்கள் படியுங்கோ" என்றார். மிகுந்த சந்தோசத்துடன் கொப்பியை வாங்கிக்கொண்டு புறப்பட்டான் கணேஸ்.

உயர்ந்தது சாதி அல்ல. கணேசு போன்றவர்களின் உறுதியான மனமும், அவன் போன்றோர் கொண்டுள்ள சமூகப்பற்றும்தான் என பண்டிதர் மனத்தில் ஒளிர்ந்தது. அவனுக்காக அந்தப்படலை என்றும் திறந்தே இருந்தது.

**இ. சச்சிதானந்தம் (ஆனந்தன்)**
எல்லைஒழுங்கை, தும்பளை,
பருத்தித்துறை.



# சிறுவர்களாகிய நாம் தான் நாட்டின் பொக்கிசங்கள்



இன்றைய சிறுவர்களே நாளைய உலகின் விடிவெள்ளிகளாகவும் பொக்கிசங்களாகவும் திகழ்பவர்கள். நாளை சமுதாயத்தை நல்ல முறையில் கட்டியெழுப்பும் சிற்பிகளாக சிறுவர்கள் கருதப்படுகிறார்கள். இந்த உலகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் இவர்கள் கையில் தங்கியதால் தான் இவர்கள் நாட்டின் பொக்கிசங்களாக விளங்குகிறார்கள்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்
மண்ணில் பிறக்கையிலே - அவன்
நல்லவனாவதும் தீயவனாவதும்
அன்னை வளர்ப்பினிலே...."

என்கிறது ஒரு திரைப்படப்பாடல். பரந்த இந்த நிலவுலகிலே இறப்பும் பிறப்பும் சகஜம். வாழ்க்கை என்பது சுழல் சக்கரம் போன்று சுழன்று ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் குழந்தை ஒன்று பிறக்கின்றது. அவன் பிறக்கும் போதே நல்லவனாகவே, மாசுமறுவற்றவனாகவே பிறக்கின்றான்.

அவன் பின் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சி பெறுகின்றான். அவன் அறிஞனாகின்றான், உத்தமனாகின்றான், நல்லவனாகின்றான் தலைவன் ஆகின்றான். இங்ஙனம் அவன் குழந்தைப் பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனுக்கு உயர்வை கொடுக்கின்றது. அவ்வாறு வளரும் ஒருவன் சிறுவனாகி, இளைஞனாகி , தலைவனாக மலர்கின்றான். இக்கருத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து இன்றைய சிறுவர்களே நாட்டின் படித்த, செயற்றிறன் கூடிய இளைய பரம்பரையாகவே தோற்றமளிக்கின்றார்கள். இளமையிலே இலட்சிய வேட்கையும், குறிக்கோளுடனும் பிள்ளைகளை வளர்ப்போமானால் நாட்டின் சிறந்த தலைவர்களாக அவர்கள் உருவாகுவார்கள்.

இவ்வாறு அவர்கள் கொண்ட இலட்சிய வேட்டைகயும், குறிக்கோளும் அவர்கள் வெற்றி பெற துணை புரிகின்றது. ஒரு மாணவன் தனது பாடசாலை உயிர் ஊட்டத்திலே தான் தலைமைத்துவப் பண்பைப் பெற்று உயிர் பெறுகின்றான். மாணவர் மன்றக் கூட்டங்களின் போதும்,

மாணவத் தலைவராக செயற்படும் போதும் அவன் தனது தலைமைத் துவத்தை பெற்றக் கொள்கின்றான்.

இதைவிட சாரணர் இயக்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூக இயக்கங்களில் பங்கு கொள்ளும் போது நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் கடைப்பிடித்து பூரண மனிதனாகின்றான்.

உலகம் புகழும் ஒளி படைத்த தலைவர்களாக விளங்கிய சில தலைவைர்களை நாமறிவோம். அவர்கள் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பின் இளமையிலே குறிக்கோளின் எதிர்பார்ப்புடன் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்தவர்கள். இவர்கள் இளமையிலே கொண்ட இலட்சிய வேட்கையே அவர்கள் உலகம் போற்றும் தலைவர்களாக வாழ வழிவகுத்துக் கொடுத்தது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. மகாத்மா காந்தி, ஆபிரகாம்லிங்கன், நெப்போலியன், வின்சன்சேர்ச்சில் போன்றோர் இதற்கு எடுத்துக்காட்டுக்களாக விளங்குபவர்கள்.

எனவே சிறுவர்கள் தமது வாழ்வில் ஒளி படைக்கவும், நாட்டின் நல்லதொரு பிரஜையாக வாழவும் பெரியவர்கள் கைகளிலேயே தான் தங்கி யுள்ளது. பெரியவர்களாகிய உங்களுக்கு அந்த கடமையும், பொறுப்பும், கடப்பாடும் உள்ளது. சிறுவர்கள் சிறப்புடனும், சீர்மிய நலன்களுடனும், பிறர் போற்றும் நற்பண்புகள் கொண்டவர்களாகவும் வாழவும் பெரியவர்களாகிய உம் கரங்களிலேயே உள்ளது.

சிறுவர்கள் நலமாக வாழவும், அவர்கள் சிறப்புடன் வாழவும் சிந்தனையை வெளிப்படுத்தவும், சிறுவர்களுக்குரிய கடமைகள், பொறுப் புக்கள் என்பவற்றை விளக்கவும் உலக சிறுவர் தினம் வழி வகுத்துள்ளது. உலகமெங்கும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்களுக்குரிய உரிமைகளை அவர்களுக்கே உரித்தாக்கி நாட்டின் பொக்கிசங்களாக அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

சிறுவர்கள் வளரும் பட்சத்தில் பல்வேறு பிரச்சனைகளுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் ஆட்பட்டு வெளிவர முடியாமல் தவிக்கின் றார்கள். சிறுவர்களை வேலைக்கு விடுதல், பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல் போன்ற இழிவான செயல்களுக்கு உள்ளாகி சிறுவர்களது மனம் மெழுகாய் உருகி வேதனைப்படுகிறது. இவ்வாறான செயல்களால்

சிறுவர்களது உரிமைகள் பாதிக்கப்பட்டு அவர்களது சிறகுகள் ஒடிக்கப்பட்டு விடுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளிலிருந்து சிறுவர்களை பாதுகாக்கும் பொறுப்பும் கடப்பாடும் பெரியவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. சிறுவர்களது உலகை ஒளிமயமாக்கி அவர்களுக்கான சுதந்திரம் வழங்கப்படுதல் வேண்டும். சுதந்திரமான வாழ்வின் மூலம் சிறுவர்களின் வளர்ச்சி சிறப்பிக்குள் இருந்து வெளியே வருகின்ற விலையுயர்ந்த முத்தைப் போல, உலகின் வளர்ச்சிக்கு வித்திடும் ஆலம் விழுதுகள் போல, சேர்ந்து உரமிட்டு சிறுவர்களது வாழ்க்கையில் ஒளிவீசுவோம். சிறுவர்களின் இதயம் பஞ்சைப் போன்றது. அதில் அம்பைக் குற்றாது அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அளிப்போம்.


சிறுவர்களே நாளைய உலகின் தலைவர்களாவர். அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய உலகைக் கட்டியெழுப்புவார்கள். தேனீக்கள் சேர்ந்து தேன் கூட்டை உருவாக்குவது போல சிறுவர்கள் சேர்ந்து ஒரு புதிய சமுதாயத்தை கட்டியெழுப்புவார்கள். சிறுவர்களின் உரிமைகள், பொறுப்புக்கள் எப்பொழுது மதிக்கப்பட்டு அவர்களுக்கான கௌரவம் வழங்கப்படுகின்றதோ அன்றே ஒரு புதிய உயிர்க்கூட்டங்கள் ஒன்று சேர்ந்து ஒரு தேசியத்தை உருவாக்கும்.

"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா நீ குழந்தையை வையாதே பாப்பா...."

என்று மகாகவி பாரதியார் தனது குழந்தைப் பாட்டில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்க வேண்டும். அவர்களுக்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கான குறிக்கோளை அவர்கள் அப்போது செயற்படுத்துவார்கள்.

"சிறுவர் உலகை ஒளியூட்டுவோம்
சிறப்புடன் வாழ வழி சமைப்போம்"

**மு.கீர்த்தனா**



# சிரிப்பு ஓர் பதுங்குகுழியா

சிரிப்பதனால் மனிதன் சுகம் பெறுகின்றான். அவன் வாழ்வு வளமாகும். சிரிப்பு மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்றெல்லாம் சிரிப்பின் மாண்புபற்றி பலவாறு கேட்டும் வாசித்தும் அறிந்திருக்கின்றேன். மேலும் சிரிப்பின் மகிமைகள் பற்றி சிந்திக்கையில் எண்ண அலைகளின் பல்வேறு இனிமை மிகு எண்ணங்களும் இதற்கெதிரான சிந்தனைகளும் பிறப்பெடுக்கின்றதை அவதானிக்கின்றேன். சிரிப்பு மனித மனதை மகிழ்வித்து இனிமைப் படுத்துவது மட்டுமன்றி சிரிப்பு உறவின் உறைவிடமாகவும் உள்மனச் சம்மத்தின் சமாந்தரமாகவும் உறவின் சாய்வுகளுக்கும் முறிவுகளுக்கும் வீழ்ச்சிகளுக்கும் இடமளியாத உன்னத வல்லமையை கொண்டிருப்பதை நான் மட்டுமல்ல நீங்களும் கூட உங்கள் வாழ்க்கை நடைமுறையில் அவதானித்திருப்பீர்கள். உண்மையில் சிரிப்பின் வல்லமை மிக சக்தி எதற்கும் இல்லையோ என எண்ணிப் பார்க்கையில் மனித மனமே நீ சுகம் பெற வாழ்வில் வளம்பெற உறவில் பலம் பெற சிரித்து மகிழ்வாயாக என கூறிட என் உள்ளார்ந்த உணர்வு உணர்கின்றது.

அத்தோடு சில பாடல் வரிகள் உண்மையை உள்ளபடி சொல்வதும் நினைவில் அது "பொம்புள சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு" அளவுக்கு மீறிச் சிரிப்பது அடங்கா பிடாரியின் பித்தலாட்டம் என்றெல்லம் நினைக்கையில் சிரிப்பின் மறுபக்கம் தெரிகின்றது. அது சிரிப்பின் வகைகள் என்றிடலாம். அன்பான சிரிப்பு, பண்பான சிரிப்பு, கனிவான சிரிப்பு, வம்பான சிரிப்பு, வீழ்த்தும் சிரிப்பு, உயர்த்தும் சிரிப்பு இவ்வாறு சிரிப்பின் வல்லமைகளை வகைப்படுத்தலாம். ஆனால் நன்மைக்கே நாம்பெற்ற சிரிப்பென்னும் கொடையை இன்று சின்னாபின்னப்படுத்தி புத்தியின் சிறுமையால் மற்றாரை சீரழிக்கவும் ஒரு இயந்திரமாக்கிக் கொண்டோம். அதுமட்டுமல்ல பலர் தங்கள் தீமையான பிழையான வாழ்வை மறைத்துக்கொள்ள சிரிப்பை ஓர் பதுங்குகுழியாகப் பாவிக்கின்றார்கள். அதாவது சிரித்து சிரித்து என்ன விடயங்களுக்கு சிரிப்பதென்று தெரியாமல் தங்களின் இயல்பு வாழ்வின் பலவற்றை மறைக்க பதுங்குகுழியாக்குவதோடு அதே பதுங்குகுழியில் இருந்து சிரிப்பென்ற ஆயுதத்தால் பலரை வீழ்த்தி பலரின் வாழ்க்கை முறைகளை கொச்சைப்படுத்தி அனாவசியமான தற்காலிக மகிழ்ச்சிகளை தங்களதாக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் உண்மையிலே உளவியல் ரீதியில் தாழ்வு

மனப்பான்மையைக் கொண்டவர்கள். அவர்கள் சிரித்தால்தான் தாங்கள் ஒரு சமூகத்திலோ, ஒரு குழுமத்திலோ, ஒரு நிறுவனத்திலோ மகிழ்ச்சியாக இருப்பார்கள். அந்த மகிழ்ச்சியில் இருள் அவர்கள் தெரிந்து கொள்ள அவர்களின் சிரிப்பில் ஓர் விழிப்புணர்வு அவர்களுக்கு அதிகம் தேவை. எனவே சிரிப்பின் மகிமையை மற்றவரின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பயன்படுத்தும் போது அதன் வல்லமையை நீ அறிந்து கொள்வாய் என்பது எனது அனுபவம். ஆனால் உனது சிரிப்பை பதுங்குகுழியாக்கி மற்றவரை மாய்த்து உன்னை உயர்த்த நீ பயன்படுத்துவாயின் உன்னையும் உன் வாழ்வு முறைமையும் நான் எச்சரிக்கின்றேன். இவ்வெச்சரிப்பு உனக்கு சஞ்சலிப்பைத் தந்தால் நீ உன் சிரிப்பில் விழிப்புணர்வு பெறுகின்றாய் என்பது 50% வீதம் உண்மை. இதனால் உன் பதுங்குகுழியை உடைத்து சிரிப்பால் உயர்வு பெற முயற்சித்தால் தொடக்கமும் முடிவுமற்ற முழுமுதலின் படைப்பாற்றல் உன்னில் விழங்கும். அது உன்னையும் புதுப்பிக்கும் புனிதர்களையும் உருவாக்கும். எனவே ஆதியானவனின் சாயலும் சிந்தனையும் உனதாக உருவாக்கப்பட்ட மனமே, நீ சிரி. உண்மையைக் கண்டுணர்ந்து சிரி. பதுங்குகுழியை தகர்த்து தளம்பாமல் சிரி. வாழ்வில் மகிழ்ந்திருப்பாய். உயர்வும் உறவும் உன்னை உளமார தேடிவரும்.

-நிறோஜன் லெம்பட்-

# நட்பின் இலக்கணம்

| | |
|---|---|
| கல்லூரியில் தோன்றினாலும் | இணைந்த நட்பு |
| கடைத்தெருவில் தோன்றினாலும் | இரண்டாகிடாமல் காத்திட |
| காயமுற்ற போது தோன்றினாலும் | இணைபிரியாமல் இருப்பதுதான் |
| தோற்றுப் போகாத உண்மையான | நட்பின் இலக்கணமாம் |
| தோழமை தான் நட்பின் இலக்கணமாம் | கல்லூரி வாழ்வுக்கு |
| இடர்கள் தொடர்ந்தாலும் | விடை கொடுத்தாலும் |
| இன்பங்கள் தொலைந்தாலும் | என்றுமே விடை கொடுக்க |
| இளமையின் நட்பு இனிமையானது | முடியாதவை நட்புக்கு |

**பி.நிறோஜினி**
தரம் - 12 (2013) லங்காமாதாமடம்,
அச்சுவேலி

# மொழி ஒரு தொடர்புறுத்தல் சாதனம்

மனிதன் தன் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்ய வல்ல ஒரே ஊடகம் மொழியாகும். மனிதன் பயன்படுத்தும் தொடர்பாடல் ஊடகங்களுள் மொழியே மிகவும் பிரதானமானது. நமது அபிப்பிராயங்கள், எண்ணங்கள், தகவல்கள், உணர்வுகள் என்பவற்றை நாம் பரிமாறிக் கொள்வதற்கு மிக இன்றியமையாத சாதனமாய் மொழி விளங்குகின்றது. இதன் செயலொழுங்கே தொடர்புறுத்தல் எனப்படும். அபிநயம், சைகை என்பவற்றால் கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்தாலும் கூட இவற்றுள் எவையுமே மொழியைப் போன்று ஆற்றலோ, பொதுமையோ கொண்டன அல்ல. மிகவும் கூடிய வாய்ப்புக் கொண்ட தொடர்புறுத்தும் சாதனம் மொழியே ஆகும்.


புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களும் ஆன்மீக அபிவிருத்திகளும் உயர்ந்த முன்னேற்றம் பெற வழி வகுத்த சமுகசமய உணர்வுகளும் மொழியால் கிடைத்த பெரு வெற்றிகளாகும். உலக தத்துவ ஞானிகள் தம் கருத்துக்களை மொழியின் உதவியினாலேயே உலகில் நின்று நிலவச் செய்கின்றன. எனவே கண்டு பிடிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் தத்துவ மேதைகள் போன்றோரின் வெற்றிகள் வாழ்க்கைப் பெறுபேறுகள் போன்றவற்றை எதிர்காலச் சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுக்கின்ற முக்கிய கருவியாக விளங்குவது மொழியே ஆகும்.

வெற்றி நிறைந்த சமுக வாழ்வுக்கு மொழி இன்றியமையாத கருவியாயுள்ளது. சமுகங்களுக்கிடையிலான உறவுப் பிணைப்புக்களை வளர்க்க உதவுகின்ற சாதனம் மொழியே ஆகும். பொருள் விளக்கம் பங்கு கொள்ளல், அறிவு வளர்ச்சி யாவுமே மொழியிலே தங்கியுள்ளதை நாம் அவதானிக்க முடியும். கல்வி சார் செயற்பாடுகளான வினாவுதல், கலந்துரையாடுதல், உரையாற்றல், கருத்து வெளிப்படுத்தல், பிரச்சினைகளைத் தர்க்கித்து தீர்வு காணுதல், விவாதித்தல் , எழுதுதல் வாசித்தல் என்ற யாவிலுமே மொழியே முதன்மையான இடத்தை வகிப்பதை கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. ஆகவே கற்பித்தல், கற்றல் ஆகிய செயற்பாடுகளுக்கு மொழி மிக அத்தியாவசியமான கருவியாகும் எனவே மொழிக்கு கற்றல் கற்பித்தலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

ஒரு நாட்டினது பண்பாட்டினை மற்றைய நாடுகட்கு வெளிப்படுத்த வல்ல சாதனங்களில் தலைசிறந்தது மொழியே ஆகும். ஆதிகால மனித சமுதாயத்தின் பண்பாடு வளர்ச்சி பெற்றதாய் இருக்கவில்லை. இந்தப் பண்பாட்டு வரட்சிக்கு வளர்ச்சியடையாத மொழியே காரணமாகும். இதிலிருந்து ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியிலும் பண்பாட்டுத் தொடர்புறுத்தலிலும் மொழியின் செல்வாக்கு அதிகம் என்பது புலனாகிறது. அறிவையும் மனப்பாங்கையும் செயற்றிறன்களையும் வழங்குவதோடு மொழியின் செயற்பாடு முடிந்து விடுவதில்லை. அது அவற்றினைப் பேணிப் பணிபுரிகின்றது. எந்தவொரு சமுதாயத்தினதும் ஒழுங்கமைந்த விழுமியங்களைப் பேணுவதும் அவற்றினையெல்லாம் எதிர்காலப் பரம்பரையினருக்கு வழங்குவதும் மொழி நடாத்தும் தொடர்புறுத்தலே ஆகும்.

இன்று தொடர்புறுத்தலுக்கு பல வழிகளும் சாதனங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. தொலைக்காட்சி, வானொலி, இணையம், செய்தித் தாள்கள், சஞ்சிகைகள், நூல்கள் என்பன இவற்றுட் சிலவாகும். இவை மூலம் தொடர்புறுத்தல் நிகழ்கின்றது. இவை அறிவையும் செய்தியையும் தகவல்களையும் வழங்குகின்றது. இவற்றுக்கெல்லாம் மொழியே முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. மொழியுடன் கூடியே மனிதனின் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் தொடர்புறுத்தல் ஒழுங்கும் வளர்கின்றது. இதிலிருந்து மொழியானது மிகவும் ஆற்றலும் முதன்மையும் கொண்ட இன்றியமையாத தொடர்புறுத்தும் ஊடகம் என்பது புலனாகின்றது.

-செல்வி. க. குகநாயகி-
ஆசிரியர்,
யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்,
பருத்தித்துறை.



# இறைவனின் அதிசய இணையத்தளம்......

## முக்கிய அறிவித்தல் :

**இறைமக்கள் எல்லோரினதும் பணிவான கவனத்திற்கு!!**

❖ நீங்க மீன் வலையைப் பார்த்திருக்கலாம், மிருகங்கள் பிடிக்கிற வலையைப் பார்த்திருக்கலாம், ஆனால் இது ஆண்டவருடைய ஆன்மாக்களைப் பிடிக்கின்ற வலை!!! (Net) - இன்ரநெற்....

❖ இது இருக்கும் இணையத் தளங்களில் எல்லாம் சிறந்தது, காசு கொடுக்கத் தேவையில்லை, கணணி தேவையில்லை, எவ்வளவு நேரமும் பாவிக்கலாம் எல்லாம் இலவசம்......... வாங்க...... வாங்க வந்து அள்ளிக் கொண்டு போங்க.......

1) **வரையறை அற்ற தொடர்பு :** "மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும், தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள், உங்களுக்கு திறக்கப்படும்" (லூக் 11:9)

2) **உத்தரவாதம் மிக்க வலையமைப்பு, எப்போதுமே துண்டிக்கப்படாது:** "அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது அவர்களுக்கு பதிலளிப்பேன், அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன், அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்" (திருப்பாடல் 91:15)

3) **தொடர்பு ஏற்படுத்த முன்னர் கூட முந்திக் கொண்டு விடை தரும் தளம்:** "அவர்கள் வேண்டுவதற்கு முன்னே நான் மறுமொழி தருவேன், அவர்கள் பேசி முடிப்பதற்கு முன்னே பதிலளிப்பேன்." (எசாயா 65:24)

4) **பணம் செலுத்தி அங்கத்தவராக இணைந்து கொள்ளும் தேவையில்லை :** "அவர்கள் என் பெயரை நினைத்து மன்றாடுவார்கள், நானும் அவர்கள் மன்றாட்டிற்குச் செவி கொடுப்பேன், 'இவர்கள் என் மக்கள் என்பேன் நான், 'ஆண்டவர் எங்கள் கடவுள் என்பார்கள் அவர்கள்." (செக்கரியா 13 : 9)

5) **இந்த வலையமைப்பில் மன அமைதி நிரம்பி வழியும்:**

*"எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல் மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்." (பிலிப்பியர் 4:6-7)*

**அன்பானவர்களே விவிலியத்தில் எண்ணற்ற பொக்கிஷங்கள் குவிந்து கிடக்கின்றன, அவற்றினை தேடிக் கண்டு பிடித்தால் எமது வாழ்வு வசந்தமாக மாறும். இதனை வாசித்த பின்னர் உடனே ஒரு விவிலியம் வாங்கினால் நல்லாருக்கும்!**

**தேடித் தொகுத்தவர்:**
**அருட்பணி.ஜோசப் செல்வன் செ.தா**

# முடக்கப்பட்ட இளமை வாழ்வு

இளைஞனே!
இழப்புக் கண்டு ஏன் கலங்குகின்றாய்
இந்நிலையோடு உன் வாழ்வு முடிந்து
– விட்டதா?
இறந்துபோன உன் நினைவுகளை
இன்றுடன் புதைகுழியில் புதைத்துவிட்டு
இனிய உன் நினைவுகளை
இன்பமாய் உன்னில் சுமந்து
இங்கிதமாய் உன் சிந்தைகளை
–புதுமையாக்கி

இரவு பகல் என்று பேரம் பேசாது
இழிவுகளை இன்னிசைக் கீதங்களாக்கி
இருகரம் விரித்து
இதயம் மகிழ
இம்மையில் களிப்புடன் மகிழ
இன்றே புறப்படு இறைஞனே – நீ
இன்றே புறப்படு.

அருட்சகோதரி ஸ்ரெலா.P

# நல்லிணக்கமும் சமாதானமும் நிறைந்த இலங்கையை நோக்கி

இன்று உலக சமாதான தினம் (செப்ரெம்பர் 21ம் திகதி உலக சமாதான தினமாக) அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்நாளில் சமாதானம் என்றால் என்ன? சமாதானத்தின் முக்கியத்துவம் என்ன? சமாதானத்தை அடைதல் சாத்தியமா? அதனை எத்தகைய வழிமுறைகளால் அடைய முடியும்? என்பன போன்ற பல வினாக்களுக்கு விடை தேட வேண்டியது சிந்திக்கும் தன்மையுள்ள ஒவ்வொரு மனிதனதும் கட்டாய கடமையாகின்றது. முப்பது வருட கொடிய யுத்தத்தின் பின்னர் இலங்கையில் சமாதான வளர்ச்சிக்கான ரூபங்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் சமாதானம் என்ற எண்ணக்கரு பலரது நோக்கில் ஒரு எட்டாக்கனியாகவே உள்ளது. அது சாத்தியமற்றது என்ற எண்ணப்பாங்கினை உடைத்து ஒவ்வொரு மனிதனுடைய நோக்கமும் சமாதானம் நிறைந்த உலகினை நோக்கியதாக இருத்தல் இன்றைய உலகினில் மிகவும் அவசியமாகின்றது.

சமாதானம் என்றால் என்ன? சமாதானம் என்ற எண்ணக்கரு நல்லிணக்கத்தை சுட்டி நிற்கின்றது. அதாவது சமாதானம் என்பது முரண்பாடுகளற்ற ஒரு நிலையை குறிக்கின்றது. இந்த முரண்பாடுகளற்ற நிலைமை ஒவ்வொருவரதும் அடிமனதில் இருந்து உருவாக வேண்டும். அத்துடன் அனைவரும் மனித உரிமையினை பாதுகாக்க வேண்டும். அதற்கு மனித உரிமைகள் குறித்த அறிவு இன்றியமையாததாகின்றது. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் பொழுது சுதந்திரமாகவே பிறக்கின்றான். பின் அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்படுகின்றான். இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் உலக சமாதான நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் வரையறுக்கப்பட்ட கொள்கை உடையதாக உலக நாடுகள் முழுவதற்கும் பொது நீதியாக பிரகடனப் படுத்தப்பட்டது. அது மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர் என்றும், அவைகளை இனம், பால், மொழி, மதம் ஆகியவற்றின் பெயரில் வேறுபடுத்தக் கூடாது என்றும், இவ்வுரிமைகள் உலகளாவிய ரீதியில் யாவர்க்கும் கிடைக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. 'சென்பிரான்சிஸ்கோவில்' 1945ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள்

சபை உருவாகிய போதே மனித உரிமைப் பிரகடனம் உருவாவதற்கு வழிவகுக்கப்பட்டது. எனினும் அறுபது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் மனித உரிமை மீறல்கள் அரசுகளில் தொடரவே செய்கின்றன. இத்தகைய நிலைப்பாடு வன்முறைகள் நிறைந்த சமுதாயத்திற்கு வித்திடுகின்றது. சமாதானத்திற்கு கேடு விளைவிக்கின்றது. எனவே சமாதானம் நிறைந்த உலகினைக் கட்டியெழுப்ப மனித உரிமைகள் குறித்த புரிந்துணர்வு அவசியமாகின்றது.

எந்தவொரு விடயமாயினும் தனிமனிதனிலிருந்து சமுதாயம், சமுதாயத்திலிருந்து நாடு, நாட்டிலிருந்து உலகு என பரிணமிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் சமாதானம் முதலில் தனிமனித அளவிலிருந்து மலர்தல் அவசியமாகின்றது. ஒவ்வொரு மனிதனும் மனம் சொல் செயல் என்ற மூன்றினாலும் தூய்மையாக செயற்படும் போது நாட்டினுடைய சமாதானம் இலகுவாகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் மொழி, மதம், இனம் என்ற அடிப்படையில் நாடு பிளவுபட்டு பல்வேறு பிரச்சினைகளாக உருவெடுப்பதைக் காணக்கூடிய தாக உள்ளது. இதற்கு காரணம் ஒவ்வொரு மதத்தை அல்லது மொழியை பின்பற்றுபவரும் மற்றைய மொழியை அல்லது மதத்தை பின்பற்றுபவரை தாழ்ந்தவராக எண்ணுவதே ஆகும். எனவே தமிழராயினும் சிங்களவ ராயினும் தம்மளவில் உணர்வதன் மூலம் ஒவ்வொருவரையும் சமத்துவமாக மதிக்கும் பண்பினை வளர்ப்பதன் மூலம் சமாதானத்தினை அடைய முடியும். இயல்பிலேயே எந்த மக்களும் எந்த மக்களுக்கும் எதிரியாக இருப்பதில்லை. அரசியல் அமைப்பு அடிப்படையிலேயே அத்தகைய முரண்பாடுகள் விதைக்கப்படுகின்றன.

மேலும் ஒரு நாட்டிற்கு சமாதானம் ஏன் அவசியம் என நோக்கின் ஒரு நாட்டினுடைய அபிவிருத்தி அந்நாட்டினுடைய சமாதானத்தில் தங்கியுள்ளது. முரண்பாடுகள் நிறைந்த ஒரு நாட்டில் அபிவிருத்தி சாத்தியமற்றது. முரண்பாடுகளால் பொருளாதாரம், கல்வி, கலை போன்ற அனைத்தும் பின்னடைவை அடைகின்றன. ஏனெனில் அனைத்து சிந்தனைகளும் முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பதிலேயே விரயமாகின்றது. சுவீஸ்லாந்து சொர்க்க பூமி என்று அழைக்கப்படுகின்றது என்றால் அந்நாட்டில் நிலவுகின்ற அமைதியான, சமாதானமான நிலையே காரணம் எனலாம். எனவே ஒவ்வொரு மனிதனும் முரண்பாடுகளை ஏற்படுத்தவல்ல கருத்துக்களையோ சிந்தனைகளையோ செயல்களையோ

தவிர்த்து சமாதானத்தை நோக்கி நகர வேண்டும். இலங்கை சொர்க்க பூமியாக மாற தனிமனிதனது சுயசிந்தனை அவசியமாகின்றது. அவ்வாறில்லாது ஒன்று கூடி உரையாடும் போது மாத்திரம் சமாதானம்...... சமாதானம்.... என்று கூறிவிட்டு திரிவதால் சமாதானம் கிட்டப் போவதில்லை.

இவை தவிர 1990 களிலும், அதற்கு பிற்பட்ட காலப்பகுதிகளிலும் முரண்பாடுகளின் வடிவங்களிலும், அவற்றுக்கான சர்வதேச சமூகங்களின் பிரதிபலிப்புக்களிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் முரண்பாட்டுக்கான தீர்வினை உலகியல் நோக்கிலிருந்து நோக்குபவர் களுக்கு சமாதானம் என்ற எண்ணக்கரு காத்திரமான பங்களிப்பினை வகிப்பதாக உள்ளது. மேலும் சமாதானம் என்ற எண்ணக்கரு இன்றைய காலகட்டங்களில் ஜனநாயகம் என்ற எண்ணக்கருவின் ஊடாக புரிந்துகொள்ளப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

சரியான நியாயித்தல்கள் மற்றும் விவாதங்களுக்கும், கருத்துக்களிலுள்ள முரண்பாடுகளை அனுசரித்து செல்வதற்கும், ஒத்துழைப்புடன் செயற்படவும், நல்லிணக்க அடிப்படையிலான போட்டிகளுக்கும், விட்டுக்கொடுப்புக்களிற்கும், சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ளவும் ஜனநாயம் ஒரு சிறந்த அரங்காக அமைகின்றது. உண்மையான சமாதானம் ஏற்படாதா? என்ற மக்களின் அபிலாஷை களுக்கு ஏற்ப சமூகத்தில் சமாதான மாற்றங்கள் ஏற்படின் முரண்பாடுகள் எளிதில் தீர்த்து வைக்கப்படக் கூடிய ஒன்றாகின்றது.

இந்தவகையில் சமாதானத்தை உருவாக்க நடைமுறைக்கு பொருத்தமான செயற்பாடுகள் குறித்து ஆராய்தல் அவசியமாகின்றது. இந்தவகையில் நல்லிணக்கம் (Harmony), சமூக நிறுவனங்களைக் கட்டுதல் (Building Institutions), சமுதாய மேம்பாடு (Community development), சமூக பொருளாதார கட்டுமானம் (Socio-Economic reconstruction), வலுவூட்டல் (Empowerment), சமூகத் தயாராக்கல் (Social mobilization) போன்ற செயற்பாடுகள் குறித்து 'பிறண்டன் கம்பர்' என்ற அறிஞர் குறிப்பிடுவர்.

எனினும் நாம் நிலையான சமாதானத்தை முன்னெடுக்க தனிமனித அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும், அரசாங்க அடிப்படை யிலும் பல செயற்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாம்

பயன்படுத்தும் மொழியும் வன்முறையற்ற சமாதான சமூகத்தை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒருவர் மற்றவரைத் தாழ்த்தாது, இனிமையான மொழியினைப் பயன்படுத்தி தங்களது அபிப்பிராயங்கள், உணர்வுகள், தேவைகள், கோரிக்கைகள் போன்றவற்றை வெளிப்படுத்த வன்முறையற்ற தொடர்பாடல் உதவுகின்றது. வன்முறையற்ற தொடர்பாடலின் மையக்கருத்து ஒருவரை மதிப்பிடுவதோ உதாசீனப்படுத்துவதோ தொடர்பாடலில் இடம்பெறக் கூடாது என்பதே ஆகும். இது மொழி சார்ந்த ஒரு விடயம் மாத்திரமல்ல இதில் நாம் எண்ணங்கள், நடத்தையில் விழிப்புணர்வுடன் செயற்பட்டு சமாதானத்திற்கு எவ்வாறு வழிவகுக்கின்றோம் என்ற திறமையும் உள்ளடங்குகின்றது.

சமாதானத்தை நிலைநாட்டுவதில் திடகாத்திரமான பங்களிப்புக்களை வழங்குகின்ற ஜனநாயக அபிவிருத்தி, சமூக ஒற்றுமை, பரஸ்பர ஆதரவு, சமத்துவம், மன்னிப்பு, மத்தியஸ்தம், நல்ல அலுவலகங்கள் போன்றவற்றை வளர்த்தெடுக்க வன்முறை நிறைந்த சமூகத்தில் கொலை, கொள்ளை, களவு, அச்சம், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், பலவந்தப்படுத்தல், பரஸ்பர குற்றச்சாட்டுக்கள், மற்றவர்களின் சுயகௌரவத்திற்கு கேடு விளைவிக்கும் செயற்பாடுகள் போன்றவற்றை ஒழித்துக்கட்டுதல் அவசியமாகின்றது. இவற்றை நடைமுறைப்படுத்துவதனால் சமாதானம் வென்றெடுக்கப்படுகின்றது. 'சமாதான மார்க்கங்களினூடாக சமாதானத்தை அடையமுடியும்' என்ற புத்த பெருமானின் கருத்து இன்றைய காலகட்டத்தில், நிலையான சமாதானத்திற்கான ஒரு கருவியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. சமாதானத்தை நிலைபெற வைக்க வன்முறை என்ற சுழற்சியிலிருந்து நல்லிணக்கம் என்ற சுழற்சிக்கு மாறுதல் அவசியமாகின்றது. இந்த நல்லிணக்க சுழற்சியின் அடிப்படைகள் எவை?

- தனிமனிதனாயினும், குழுக்களாயினும் தவறுகளை ஒப்புக்கொள்கின்ற மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளுதல்.
- மற்றவர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வதும், எதிரிகளை நண்பர்களாக்குவதும்.
- 'ஒற்றுமையே பலம்' எனும் கொள்கையை கடைப்பிடித்தல்.

- மனித உணர்வுகளை புரிந்து கொள்ளுதல், ஒருவருக்கொருவர் நம்பிக்கையை வளர்த்தல்.
- மனித உரிமைகள், ஜனநாயகம், மற்றும் சமூக நீதி என்ற அடிப்படையில் அதிகார பரவலாக்கம் மற்றும் சமாதான கலாசாரத்தை வளர்த்தெடுத்தல்.

எனவே நாம் அனைவரும் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். சமாதானம் என்பது எட்டாக்கனியல்ல. ஆனால் அது சிரமமானதுவே, எதுவரையெனில் ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் அதை உணரும் வரையிலேயே.

விடுதலையைப் பெற்றெடுக்க வேண்டப்பட்ட வழிகளில் முயற்சிக்கும் போது...., பகிர்ந்தளிக்கப்படும் அல்லது பகிரப்படும் விடுதலை நோக்கிய மனச்சாட்சியுடனான போராட்டங்கள்.., மற்றவர்களின் கருத்துக்களை மதிப்பதோடு, இடமளிப்பதோடு, உயிர்களை பாதுகாப்பதோடு, சுத்தமான நிலையினாலே மனித உரிமைகளை மதிக்க...., ஜனநாயகம், பன்முகத் தன்மை என்பன உயிர்பெறும், சமாதானம் மலரும்.
" நல்லிணக்கம் குறித்த விழிப்புணர்வே சமாதானத்தின் அடிநாதம். சமாதானம் எனும் வெள்ளைப் புறா சிறகடிக்க மனச்சாட்சி எனும் கதவுகளைத் திறவுங்கள்."

சிவகுமார் நிரோசன்,
இரண்டாம் வருடம்,
மெய்யியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்



# அஞ்சலியகத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தினகலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

சர்வதேச சிறுவர் தின கலைவிழா நிகழ்வானது அஞ்சலியக குழுமத்தினால் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் அஞ்சலியகத்தில் "எமது செல்வங்களாகிய சிறுவர்களைப் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்மாகாண முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் (அ.ம.தி) வருகை தந்து சிறப்பித்திருந்தார். கௌரவ விருந்தினர்களாக V.செல்வராசா வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், சு.வரதீஸ்வரன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் , S.கமலநாதன் M.J.F Team Leader.

இந் நிகழ்வை சிறப்பிக்க அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், சமயப் பெரியோர்கள் ,அஞ்சலியக பணியாளர்கள், அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள், பெற்றோர்கள், அஞ்சலி இளையோர் கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் யாவரும் இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்தார்கள்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த போல் நட்சத்திரம் அடிகளாரால் அஞ்சலிக் கொடியேற்றப்பட்டதுடன் அஞ்சலிப்பூக்கள் , சிறுவர் கழக மாணவர்களினால் அஞ்சலிக்கீதம் இசைக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்கள். தொடர்ந்து இறைவணக்கம், மங்கள விளக்கேற்றல், வரவேற்பு, வரவேற்பு நடனம், ஆங்கிலக்குழுப் பாடல், ஆங்கிலப் பேச்சு, ஆங்கில நாடகம், நடனம் முதலிய நிகழ்வுடன் அஞ்சலியக மாணவர்களின் சிறுவர் தின சுலோகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. மேலும் 13 பாடசாலைகளுக்கிடையே அஞ்சலியகத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தினைப் பெற்ற கும்மி நடனம், குழு நடனம் , கோலாட்டம், தனிநடனம், பேச்சு, கவிதை முதலிய நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர் உரை, வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல், அஞ்சலியக இயக்குனர் உரை, பரிசில்கள் வழங்கல், பிரதம விருந்தினர் உரை, சிறுவர் தின நிகழ்விற் சகல உதவிகள் புரிந்தவர்களுக்கும் மாலை அணிவித்து கௌரவித்து நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

இச் சிறுவர் தின நிகழ்வினை கண்டு கழித்தவர்கள் சிறுவர்களின் ஆற்றல்கள், திறமைகளை கண்டு பிரமித்து பாராட்டுக்களைத் தெரிவித்தார்கள்.

**-தொகுப்பு : G.V.விமலதேவா-**
(உளசமூக பயிற்றுவிப்பாளர்)
அஞ்சலியகம்.

# உணர்வுகளின் ஊற்றுக்கள்

உங்கள் உள்ளத்தினில் ஏற்படும் எண்ணங்களின் உணர்வுகள் பலவாகலாம். அதனைத் தனது செயலால் வெளிப்படுத்துவதில் உணர்வுகளின் ஊற்றுக்கள் வார்த்தையாலும் உடல் மொழியாலும் மிக சுலபமாக வெளிக்காண முடியும் என்பதற்கு உதாரணமாக எம் ஒவ்வொருவரது வாழ்வுமே சாட்சி சொல்லும்.

தீயினால் சூடுபட்டவரது உணர்ச்சியின் வெளிப்பாடு அதன் உணர்ச்சியால் உந்தப்பட்டு உணர்வுகளின் அடையாளமாக கண்கலங்கி கண்ணீர் விடுவார். இதனைப் பார்த்தவர் மனங்களும் தம் உணர்வுகளை முக பாவனையாக இரக்க, கவலை உணர்வுகளை வெளிப்படுத்துவதை உணர முடியும்.

உணர்வுகள் வெளிப்படுவதற்கு எமது எண்ணங்களில் ஏற்படும் தீர்ப்புக்களும் காரணமாகிறது என்பதனை பாம்பு, பல்லி, அட்டை, எறும்பு என சிலவற்றை கண்டதும் ஏற்படும் பய உணர்வுகளின் வெளிப்பாடுகளும் இதற்கு முன் உதாரணமாகும்.

எமது எண்ணங்களில் ஏற்படும் அனுபவங்கள் , தீர்மானங்கள் எடுக்கும் போது அவை உணர்வுகளின் ஊற்றை செயல்படுத்துகின்றது. அவசர முடிவு எடுத்தால் அதன் விளைவு தவறானவையாக தனிமனிதனை மட்டுமல்ல, சமூகத்தையும் தாக்க வல்லது என்பதனை குடும்பங்களில், சமூகத்தில் ஏற்படும் விபரீத நிலைகள் முன் உதாரணங்களாகும்.

வாழ்வில் ஏற்படும் சவால்கள், பிரச்சனைகள் எதுவானாலும் எமது உணர்வுகளின் மாற்றங்கள் , திடீர் முடிவுகளால் ஏற்படும் விளைவுகளின் விபரீதம் பலரது வாழ்வையே மாற்றி விடுகிறது. இதை தனிமனிதன் உடன் எடுக்கும் தீர்மானத்தால் ஏற்படும் உணர்வின் விளைவுகளே. இதனால் எமது நாட்டில் தற்கொலைகள் உலக நாடுகளிலும் முதலிடம் வகிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

கயிற்றைக்கண்டு பாம்பாக நினைத்து கத்தியவர் உடன் எடுக்கும் முடிவுகள் சற்று ஒருகணம் சிந்திக்க தவறுவதால் உணர்வுகளில் ஏற்படும் மாற்றம் பலவாக மாறும். இது போன்றே உடன் ஏற்பட்ட உணர்ச்சியின் வெளிப்பாடுகள் உணர்வுகளின் மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.

ஒருவரது உணர்வை அவராகவே இனம் காணாதவரை அதனை வழிப்படுத்துவது கடினமாகும். தற்போது என்ன உணர்வில் இருக்கின்றேன் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். இந்த உணர்வு நிலை தொடர்ந்து இருக்குமென கூறமுடியுமா? இக்கணமே உன் சூழலில் ஏற்படும் மாற்றம் எமது உணர்வுகளை மாற்றலாம். அல்லது எமது உடல் சார்ந்த நிலைமாற்றமான பசி, களைப்பு, உடல் பாதைகள் போன்றதால் ஏற்படும் மாற்றங்கள் எம் சூழலில் கேட்கும் செய்திகள், சத்தங்கள், வதந்திகள் கிரகிப்பதாலும் எமது உணர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

உணர்வுகளின் நிலை ஒரு நாளில் எல்லா நேரங்களிலும் நிரந்தரமாக இருப்பதில்லை. அதைவிட எமது உணர்வுகளில் அதிக செல்வாக்கு செலுத்த வல்லதும் நாம் தொடர் நிலைகளில் அதிகமாக மேற்கொள்ளும் முடிவுகளும் எமது உணர்வுகளில் சிலவற்றை அதிகமாக வெளிப்படுத்த வல்லது.

உ-ம்:- நான் எதற்கு எடுத்தாலும் உடன் கோபமாகிறேன், பயப்படுகிறேன், சிறிய விடயங்களிலும் உடன் கண்ணீர் விட்டு அழுகிறேன். சிரிப்பொலிகளால் சூழலில் வெளிப்படுத்துகிறேன். இவை போன்று எமது உணர்வுகள் அதிகமாக வெளிப்படுத்துவதால் எனது உணர்வுகளை இனம் கண்டு கொள்ள முடியும்.

எனது உணர்வுகளின் அதிக வெளிப்பாடுகள் ஏதுவாக இருக்கும். அதனால் ஏற்படும் பயன்களை ஒருகணம் சிந்திக்க முனைதல், அவை ஆரோக்கியமானதா, ஆபத்தானதா என்பதனை பகுத்துப் பார்த்து நல்லது எவை, தீயவை எவை என்பதனை தவிர்த்துக் கொள்ள முனையலாம்.

உணர்வுகளின் உலகம் மிக விசாலமானது. எல்லா உணர்வுகளும் தேவைதானா? பயன் உள்ளதா? பயன் அற்றதா? என்றால் எதை தீர்மானிப்பீர்கள்.

கோபம், பயம், வெறுப்பு, கவலை, விரக்தி, வேதனை எமது வாழ்வில் பலமுறை தரிசித்திருக்கலாம். மகிழ்ச்சி, இன்பம், சந்தோசம், மட்டும் வாழ்வில் சுவைப்பதில்லை. எல்லா உணர்வுகளின் ஊற்றுக்களும் தேவையானது அனுபவிக்க வேண்டியதுதான். வாழ்க்கையில் இலகுவாக கிடைக்கும் மகிழ்வை விட பல சவால்களை வென்று அதனால் ஏற்படும் மகிழ்வு சந்தோஷத்தை அனுபவிப்பதன் சிறப்புக்கு எதுவும் நிகர் இராது.

எமது நாட்டு மக்களும் பல்வேறு நெருக்கீடுகள், போரின் வடுக்களைத் தாங்கி கடந்தபோது ஏற்பட்ட அனுபவங்கள், பிரிவுகள், இழப்புக்கள் யாவும் பெறுமானம் மிக்கவை. அக்கணங்களில் ஏற்பட்ட உணர்வுகளில் விபரீத முடிவுகளை எடுத்தவர்கள் தம் வாழ்வையும் மாய்த்து, தமது குடும்ப சிறப்பையும் சிதைத்தவராக உள்ளனர். இதனால் மதுபோதை, தற்கொலை, குடும்ப பிறழ்வு, சமூகச் சீர்கேடுகள் இன்றும் மேலோங்க காரணமாகிறது. இதனை சமூகத்தில் உள்ளோர் சற்று ஆழமாக நோக்க வேண்டும்.

தனி மனிதனாகவோ, குழுமமாகவோ, உணர்வுகளின் ஊற்றுக்களை வெளிப்படுத்தவுள்ள முடிவுகள் நல்வழிப்படுத்த தமது சூழலில் ஏற்படும் நிலைகள் கண்காணித்து ஆரோக்கிய சூழலைஉருவாக்கும் ஒவ்வொரு நிலையாலும் உணர்வுகளின் உலகை நற்சூழலாக்க முன்வர வேண்டும். இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றி ஒன்றிணைவோம். இதுவே உணர்வுகளின் ஊற்றுக்களை சீர்படுத்த உதவும் சிறந்த பணியாகும்.

-செ.யோசப்பாலா-
உளச்சமூகச் சீராளன்

# நட்பின் தூது

என் தோழியே!
நீ என்னுடன்.......
உரையாடிய பொழுதுகளில்,
ஒன்றாக இருந்த கணங்களில்,
எனை அரவணைத்து, கன்னத்தில்
முத்தமிட்ட தருணங்களில்,
என்னோடு உணவருந்திய
அழகிய நாட்களில்,
என் மடியில் உறங்கிய
இன்பமான இரவு பொழுதுகளில்
என்னருகில் இருந்த பொன்னான
எட்டு வருடங்களில் - எல்லாம்
என்னால் உணரமுடியவில்லை
பிரியும் தருணமே உணர்ந்தேன்
உன் "உயிர் நண்பி நான்" என்று
தனிமையில் தோய்ந்தவளாய்
காத்திருக்கின்றேன் பழைய
நினைவுகளுடன்.......

-மயூ-

# "மாற்றியது நீயே....."
## [சிறுகதை]



(தொடர்.........)

திவ்யாவிற்கு சுருக்கென்று நெஞ்சு வலித்தது. அதுக்கென்ன மாமி..... மூண்டு பெட்டையளோடை நான் படுற பாடு அவர் எங்கையெண்டாலும் போட்டு வரட்டும்" சமாளித்த வாறே மெல்லச் சிரித்தாள் திவ்யா மூக்குக் கண்ணாடியை உயர்த்தி திவ்யாவை வினோதமாகப் பார்த்தாள் கமலம் மாமி "இருங்கோ.....மாமி..தேத்தண்ணி போட்டுவாறன்" அந்தக் கதைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக விர்ரென குசினிக்குள் எழுந்து போனாள் மோகனிடம் இதைப் பற்றிக் கேட்க நினைத்த போதும் முதல் நாள் மோகன் சொன்னது ஞாபகம் வரவே பேசாமல் இருந்து விட்டாள். திருமணம் முடிந்த நாளிலிருந்து அவள் வெளியே சென்றதில்லை. ஏதும் விசேசமெண்டால் மோகனுடன் போவாள் வருவாள் அவ்வளவு தான் நாலு பெண்டுகள் கூடினால் நாட்டையே வித்திடுவினம்" இறந்து போன பூரணம் அடிக்கடி சொல்லும் வார்த்தை. ஆனாலும் கொஞ்ச நாட்களாவே மோகனில் பல மாற்றங்கள் இருப்பதை மட்டும் அவளால் உணர முடிந்தது. ரெலிபோன் வந்தால் போதும் மாமரத்தின் கீழ்ப் போய் பல மணித்தியாலங்கள் குசுகுசுவெனக் கதைப்பான். அவள் அதை அசட்டை செய்யவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. வீடு வாசல் கழுவி, முற்றம் கூட்டி தோய்ந்து சுவாமிப் படத்துக்கு சாம்பிராணி கொழுத்தினால் அந்த வாசமே அவளுக்கு மனநிறைவையும், புது உற்சாகத்தையும் கொடுக்கும். வழமை போல இளையவன் சர்மினியைத் தூக்கிக் கொண்டு சந்தைக்குப் போனாள். ஒன்பது மணிதான் ஆனால் சுட்டெரித்தது வெயில் வழமையாக வாங்கும் தேவியும் வரவில்லை. அவளிடம் தான் உடன் மரக்கறி வாங்கலாம். காய்ஞ்சு போனதைத் சமைச்சு என்ன பிரயோசனம்? கைகள் விறைக்கவே சர்மினியைக் கீழே இறக்கி விட்டு அந்தக் கட்டிலில் அமர்ந்தாள். தூரத்தே குமுதினி வருவது தெரிந்தது. திவ்யாவின் பாலிய சிநேகிதி. ஏதும் அவசர தேவைக்குத்தான் இந்த சந்தைக்கு வருவாள். "10 குடுத்து ரவுணுக்குப் போனால் 100 இலாபத் தோடை வரலாம். இஞ்சை எல்லாம் டபிள் விலை" அடிக்கடி குமுதினி கூறும் அறிவுரை குமுதினி வந்ததும் வராததுமாக " திவ்வி எப்ப கொழும்பால வந்தனீ..." கைகளை இறுகப்பிடித்துக் கொண்டாள். திவ்யாவுக்கு ஒன்றும் புரியவில்லை." "இல்லை திவ்வி போன

கிழமை கொழும்புக்குப் போக எண்டு மோகன் 2 சீற் புக் பண்ணினதாம். அதுதான்" விளங்கினாள் குமுதினி போன கிழமை மோகன் போன ஞாபகம் வந்தது திவ்யாவின் நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது. இவ்வளவும்... நடந்திருக்கு.... நான்....

கடைசியாகப் பிரியும் போதும் குமுதினி சொன்னாள். "இப்பவும் கிணத்து தவளையாயிராதை. ஆம்பிளையன் மரத்துக்கு மரம் தாவுற குரங்குகள் மாதிரி. எதுக்கும் உசாராயிரு" குமுதினி சொன்ன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. எதையும் விட்டுக் குடுக்கலாம். ஆனால்.... கணவனையோ..." அவளால் கற்பனையில் கூட நினைக்க முடியவில்லை. மனதிலே பெரும் போராட்டமே நடந்து கொண்டிருந்தது. குமுதினி பொய் சொல்ல மாட்டாள் என்பது அவளுக்கு நன்றாவே தெரியும். கமலம் மாமி கண்ட படியால் தான் முதலியே ஒரு போடு போட்டிருக்கிறார். குட்டி போட்ட நாயைப் போல அங்கும் இங்கும் அலைந்தாள். சாப்பிடவுமில்லை. உடலும் உள்ளமும் சேர்ந்தாலோ என்னவோ கடைசியில் களைத்துப் போய் கதிரையில் அப்படியே தூங்கிப் போனாள். கேற் திறக்கும் சத்தமும், மோட்டார் சைக்கிள் லைற் வெளிச்சமும் முகத்திலடிக்கவே திடுக்கிட்டு எழும்பினாள் திவ்யா. அன்றும் நேரம் பிந்தித்தான் வந்திருந்தான் . " பிள்ளையள் நித்திரையே..." கேட்டபடி விலகியவனிடமிருந்து ஒரு நாற்றம் வந்தது . நிலைமையைப் புரிந்து கொண்டாள். "இந்த பழக்கமும் வந்திட்டுதே" மனம் புகைந்தது. இது கேட்கும் சந்தர்ப்பம் இல்லையெ ன்பதைப் புரிந்து கொண்டாலும் அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவனுக்கு சாப்பாடு கொடுப்பதற்குக் கூட அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. தன் நம்பிக்கைக்கு துரோகம் செய்து விட்டான் என மனம் பதைபதைத்தது. அவள் இன்னும் ஏமாறத்தயாரில்லை.

அவள் நேரடியாகவே கேட்டாள் , அதன் விளைவு மெல்லத் தொடங்கி அவன் போட்ட சத்தத்தில் ஊரே கூடியது. அவள் நிலைந்து குலைந்து போனாள். அவள் இதை எதிர்பார்க்கவே இல்லை . கையில் கிடைத்ததாள் தூக்கி எறிந்தான். அது அவளின் தலையில் பட்டு இரத்தம் கசியத் தொடங்கியது. அவன் வெளியே சென்றுவிட்டான். " ஓம் அது உண்மை தான். நீ என்ன செய்யப் போறாய்" அவன் இறுதியாகச் சொன்ன வார்த்தை அவளுக்கு சம்மட்டியால் அடிப்பது போன்றிருந்தது. வந்தவர்கள் ஏதேதோ சமாதானம் சொன்னார்கள் எதுவும் அவள் காதுகளில் ஏறவில்லை. கண்ணாடி உடைந்திருந்தால் அவர்களுக்கு கேட்டிருக்கும். அவளின் கற்பனை கோட்டைகள் இடிந்து நொருங்கியது அவளுக்கு மட்டும் தானே கேட்டது. " பிள்ளை அவன்ரை கோபமாறத்

திரும்பி வருவான். ஊரில உலகத்தில இப்படி எத்தனை நடக்குது, சும்மா கதைக்குச் சொல்லலாம் நான் வாழுவன் எண்டு. ஒரு மேசையைத் தூக்கேலாத நாங்கள் இந்த சுமையளைத் தூக்குவமே. மண்ணாசை,பொன்னாசையை விட இந்தப் பெண்ணாசை அவன் மனுசராயிருக்கமாட்டான். இவன் சுதாகற்ரை மனுசி 6 பிள்ளையை விட்டிட்டு 3 பிள்ளை தகப்பனோட ஓடினாள் பிறகு என்ன நடந்தது. சுதாகர் திரும்பவும் அவளைக் கூட்டி வந்து வைச்சிருக்கான். ஏனெண்டால் அவனால 6 பிள்ளைகளையும் வளர்க்கேலாது தானே. பொறுமையாயிரு பிள்ளை" தங்கள் வேலை முடிந்ததாக எல்லோரும் சென்றுவிட்டனர். தன் பிஞ்சுகளை சாகடிக்கும் தைரியம் அவளுக்கு இல்லை. தன்னை மாய்த்துக் கொண்டாலும் பெற்ற தகப்பனையே நம்ப முடியாத காலம். ஆனால் மோகனுடன் அவளால் நிச்சயம் வாழ முடியாது. இவ்வளவு காலமும் வாழ்ந்ததை நினைச்சாலே அருவருப்பாக இருந்தது. இப்படித்தான் வாழவேண்டுமெண்டு பழக்கப்பட்டவளால எப்பிடியம் வாழலாம் எண்டு சமாளிக்கேலாது. ஊரில உலகத்தில நடந்தால் அது சரி எண்டாகுமே.

அன்று போனவன் திரும்பி வரவேயில்லை. நாலு, ஐந்து மாதங்கள் உருண்டோடி விட்டன. அவனைப் பற்றிய தகவல் ஏதுமில்லை. சொந்தம் என்று வந்தார்கள், அனுதாபக் கண்ணீர் விட்டார்கள் . அவர்களைப் பொறுப்பெடுக்க முன் வரவில்லை. ஒரு வேளை மோகனின் பெற்றோர் இருந்திருந்தால் ஆறுதலாயிருக்குமோ என்னவோ. நகைகளை ஒவ்வொன்றாக வித்து உயிர் போகவிடாமல் காத்தாள். அவள் பட்டினி கிடந்த நாட்கள் பல. எதிர் காலமே கேள்விக் குறியாக இருந்தது. அப்போது தான் அந்தத் தகவல் கிடைத்தது. அந்தச் சுஜாதாவுடன் போய் விட்டானென்றும் அவளுக்கு ஐந்து பிள்ளையளை விட்டிட்டு.. ஒரு தாயால...அவள் உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. உயிர் கொடுப்பான் தோழன் என்பதற்கு குமுதினி தான் சான்று அவளுடைய ஆறுதல் தான் அவளைத் தாங்கி நின்றது. ஒரு கொட்டிலைப் போட்டு கொஞ்ச பிள்ளையளையும் சேத்து படிப்பிக்கும் பொறுப்பை திவ்யாவுக்குக் கொடுத்தாள். சிறியதாக தொடங்கிய ரியூட்டறி இப்போது உயர்தரத்துக்குப் பேர் போன ரியூட்டறியாக மாறியது. பொருத்தமான புகழ் பெற்ற ஆசிரியர்களையும் அவளே தேடிக் கொடுத்தாள். அதுவும் பெண்களாக ஏனென்றால் இந்தக் கண் கெட்ட சமுதாயத்தின் பார்வையை அவள் நன்கு அறிவாள். நாளாக நாளாக திவ்யாவின் மனதில் வைராக்கியம் வளர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் படபடப்புடன் வந்த கமலம் மாமி திவ்யாவின் கைகளை இறுக்கிப் பிடித்து கொண்டாள். ஆச்சரியத்துடன் நிமிர்ந்தாள் திவ்யா. " பிள்ளை மோகனல்லே... அக்சிடென்ற் ஆகி... ஆபத்தான..." இழுத்தாள்

கமலம் மாமி. "ஐயோ.... பாவம் துளசி" அனுதாபம் கூறினாள் திவ்யா. " துளசியின்ரை மோகனில்லை பிள்ளை.. உன்ரை.... விக்கினார், " மாமி .. எனக்கு நிறைய வேலையிருக்கு நீங்கள் போட்டு வாங்கோ." முகத்திலறைந்தாற் போலக் கூறி விட்டு விர்ரென எழுந்து சென்றாள் திவ்யா. திவ்யாவையும் பிள்ளைகளையும் கடைசியாகப் பாக்க வேணுமெண்டு ஊரவர் மூலம் தகவல் அனுப்பினான் மோகன். வந்தவர்களிடம் திவ்யா ஒரே ஒரு கேள்வி மட்டுமே கேட்டாள். " பத்து வருசமாய் எங்கை இருந்தனீங்கள்". வந்தவர்கள் பதில் கூற முடியாமல் ஓட்டம் பிடித்தனர். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதுக்கு.

பிள்ளை திவ்யா.. எழும்பித் தோய்ஞ்சு போட்டு.. இந்தா.... இந்த வெள்ளைச் சீலை உடு." கமலம் மாமியின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தாள் திவ்யா. அடக்கி வைத்திருந்த பொறுமை எரிமலையாக வெடித்தது. " என்ன மாமி விசர்க்கதை கதைக்கிறியள். நான் ஏன் வெள்ளைச் சீலை உடுக்க வேணும். என்ரை புருசன் செத்து பத்து வருசமாய் போச்சு. இப்ப மோகன்ரை மனிசியல்லோ உடுக்க வேணும். ஏன் அவள் ஆரோடையோ ஓடிப் போட்டாளே. ஏதோ இது மோகனுக்கு குடுத்த சீதன வீடு அவன்ரை இறுதிச்சடங்கு அவன்ரை வீட்டில நடக்க வேணுமெண்டு வாசிகசாலைத் தலைவர் கந்தசாமி அண்ணை கேட்டார். அதால தான் தந்தனான். இல்லையெண்டால் சொல்லுங்கோ இப்பவே நானும் பிள்ளையளும் வெளியில போறம். " ஆவேசமாகக் கத்தினாள் திவ்யா. எல்லோரும் வாயடைத்து நின்றனர் அவர்களால் வற்புறுத்த முடியாதே. ஏனெனில் இன்பத்திலும் துன்பத்திலும் பங்குபற்றுவர்களுக்கே மாத்திமே அந்த உரிமை உண்டு. குமுதினியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் ஓடியது. அனாதைப் பிணமாக அவனுடைய இறுதி ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. சம்பிரதாயங்களை நினைவூட்டிய பரமுமாமாவால் முக்கியமான இந்தச் சடங்குகளை நிறைவேற்ற முடியவில்லை ஒருவனுக்கு ஒருத்தி எண்டில்லாமல் எங்கடை தமிழ்ப்பண்பாடுகளை மீறி நடக்கிற எல்லாருக்குமே இது ஒரு பாடமாக அமையட்டும். விஞ்ஞான முறைப்படி கிருமிகள் தொற்றி விடாமல் தோய்ந்து உடைகளை மாற்றிவிட்டு தொடர்ந்து தன் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக ரியூட்டறியை நோக்கி திவ்யாவின் மோட்டார் சைக்கிள் விரைந்து கொண்டிருந்தது.

**முற்றும்.**

**தேவகுமார் ஆனந்தக்கிளி**
யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை

# வானத்தை எட்டும் வாழ்வு வேண்டி கடைப்பிடிப்போம்



## காவியத்தை

வாழ்க்கை ஒரு சோகம் - சமாளிக்கவேண்டும்
வாழ்க்கை ஒரு வெகுமதி - ஏற்றுக்கொள்ள வேண்டும்
வாழ்க்கை ஒரு வேதனை - தாங்கிக் கொள்ள வேண்டும்
வாழ்க்கை ஒரு போராட்டம் - வென்று காட்ட வேண்டும்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடக்கூடாது
வாழ்க்கை ஒரு புதிர் - விடுவிக்க வேண்டும்
வாழ்க்கை ஒரு பயணம் - சென்று முடிக்க வேண்டும்

பொறுமையை விட சிறந்த தவமில்லை
திருப்தியை விட உயர்ந்த இன்பமில்லை
ஆசையை விட பெரிய தீமையில்லை
கருணையை விட பெரிய அறமில்லை
மன்னிப்பை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை

முடிந்த வழிகளில் எல்லாம் நன்மை செய்
முடிந்த வகைகளில் எல்லாம் நன்மை செய்
முடிந்த இடங்களில் எல்லாம் நன்மை செய்
முடிந்த நேரங்களில் எல்லாம் நன்மை செய்
முடிந்த மனிதருக்கு எல்லாம் நன்மை செய்
வாய்ப்பு தானாக வருவதல்ல
மனிதன் தானாகவே உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும்.

★விரும்புவது அமையாவிட்டால் அமைவதை விரும்பு★

★ உலகத்தில் எது மாறினாலும் உன்னுடைய நிலைமை
மாறாது எப்போதெனின் உன் மனதை உன்னால்
அடக்க முடியுமானால் மட்டும்.★

**R.சிவரூபன்**
தும்பளை

# பெற்றோரையும் ஏமாற்றி எம்மையும் ஏமாற்றி!

"அள்ளி அணைத்திடவே என் முன்னே
ஆடி வரும் தேனே"




என்ற பாடல் அடிகளில் தாய் தனது பிள்ளையை எப்படி அழைக்கிறாள். அவ்வாறு அழைக்கும் போது அவள் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி எத்தகையது? அவ் உணர்ச்சிகள் தான் பிள்ளை பள்ளி சென்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் வாங்கி வைத்தியரோ அல்லது பொறியியலாளராகவோ வேண்டும் என்ற கனவுகளுடன் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புகின்றார்கள்.

ஒவ்வொரு அதிகாலையிலும் பிள்ளைகளை நீராட்டி உடை அணிவித்து அழகுபடுத்தி பிள்ளை நிற்கும் இடத்திற்கே பால் கொண்டுவந்து வைப்பாள் தாய். ஆனால் இன்றைய பிள்ளைகள் "பண்பாட்டில் சிறந்தவர்கள் எம்பிள்ளைகள் நாமின்றி வேறில்லை" என்ற காலம் மாறி மேல்நாட்டு கலாச்சார மோகத்திலும், கையில் தொலைத்தொடர்பு சாதனங்களிலும் மூழ்கியுள்ளனர். தாய் பால்கொண்டு வந்து வைத்து தட்டுப்பட்டது கூட தெரியாமல் தமது தொலைபேசி பாவனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தாய்க்குத் தெரியாமல் தாயை ஏமாற்றுகின்றார்கள். இன்று தற்கால உலகு துரிதமாக மாற்றம் அடைந்து வருகின்றது. அதற்கேற்ப இலங்கையும் முன்னேறி வீறு நடை போடவேண்டியுள்ளது. ஆனால் இப்போது தொலைத்தொடர்பு பாவனையில் பள்ளி கற்கும் மாணவாகள் வீறு நடை போடுகிறார்கள். மாணவர்கள் நாட்டின் வருங்காலத் தூண்கள் என்ற காலம் மாறி தொலைத்தொடர்புப் பாவனையில் அத்திவாரமாகக் காணப்படுகிறார்கள்.

ஏன் இந்த நிலமை! எமது முன்னோர்கள் பள்ளி கற்கும் காலத்தில் அதிக நேரத்தில் அறிந்தவை புத்தகம் தான். ஆனால் பிள்ளைகள் இன்று அதிக நேரத்தில் செல்வாக்குச் செலுத்துவது தொலைத்தொடர்பு சாதனத்தில்தான். இத் தொலைத்தொடர்பு சாதனத்தில் எவ்வளவு துஸ்பிரயோகம் இடம்பெறுகின்றது. இன்று ஆபாசப் படம் கூடப் பார்க்கின்றார்கள் பள்ளி கற்கும் மாணவர்கள். பெற்றோர் வீட்டில் என் பிள்ளை கல்வி கற்க சென்றுவிட்டார் என்று நினைக்க பிள்ளையின் உளத்திறன்கள் மனப்பாங்குத்திறன்கள் போன்றன மூலம் தவறான தொலைத்தொடர்புப் பாதையை நோக்கிச் செல்கின்றார்கள். இதன் விளைவால் தற்கொலைகள் கூட இடம்பெற்றுள்ளன. ஏன் பிள்ளைகள் பெற்றோரையும் ஏமாற்றி தங்களையும் ஏமாற்றுகின்றனர்.

கை. கிரி (FSc)
உளசமூகப்பணியாளர், அஞ்சலியகம்.

# சிறுவர் சிறகை ஒடிக்காதீர்!



22ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் நாம் பார்போற்றும் அளவிற்கு இயந்திரமான இவ்வுலகில் "மனிதன்" என்கின்ற பாத்திரம் வகித்து வருகின்றோம். தொழில்நுட்பத்திறனுடைய அதிகரிப்பு காரணமாக மனித உரிமைகளும், பொறுப்புக்களும் தட்டிப் பறிக்கப்பட்டு மனிதன் நிர்க்கதி ஆகிவிட்டான். இதில் குறிப்பிடத்தக்கவராய் சிறுவர்கள் இன்று திகழ்கின்றனர்.

சிறுவர்கள் என்ற தரப்பினர் 2ம் உலக மகா யுத்தம் வரை தீட்டப்படாத கத்தியாயும், நீக்கப்படாத இருளாயும் காணப்பட்டனர் என்கின்றது வரலாற்றுச் சான்று. 1948ம் ஆண்டு "ஐக்கிய நாடுகள் சபையின்" அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் வருகையுடனே "சிறுவர்கள் நாளைய உலகின் பொக்கிஷங்கள்" என்ற உண்மை புலப்படலாயிற்று.

1989ம் ஆண்டு பொதுச்சபையினால் கொண்டுவரப்பட்ட சிறுவர் உரிமை சாசனம் உயிர்வாழ்தல், பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகிய உரிமைகளை உள்ளடக்கியிருந்தமையினாலேயே அது சிறுவர் உரிமை தொடர்பில் ஓர் மைல் கல்லாக காணப்பட்டது.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்கின்றது முதுமொழி. அவ்வாறு நோக்குமிடத்து ஆறறிவு படைத்த எம் நாளைய உலகின் நடத்துனர்களை அவ்வாறு நோக்குதல் தவறேதுமில்லை. பிள்ளைச்செல்வம் என்பது பெறுமதிமிக்க சொத்தேயாம். அதனை இன்றைய தலைமுறை உணராததால் நாளைய தலைமுறை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இன்றைய உலகின் தலையாய கடமை யாதெனில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதும், அதற்கான தீர்வை அச்சுறுத்தலுமே ஆகும்.

எம் தாய்நாட்டிலே 1991ம் ஆண்டு சிறுவர் உரிமை சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கடந்த கால நிலைமைகளை எண்ணிப் பார்க்கும் போது யுத்தநிலைமை, பொருளாதார நெருக்கடி போன்ற அசாதாரண நிலைமைகள் காரணமாக சிறுவர் துஷ்பிரயோகம் எனும் வெறி தலைவிரித்து ஆடி வருகின்றது.

இன்றும் ஐநா சபைப் பொதுக்கூட்டத் தொடர் செப்டெம்பர் மாதம் தொடங்கி ஒக்டோபர் வரையிலான காலத்தில் நடைபெற்றாலும் சிறுவர் உரிமை தொடர்பாக 184 நாடுகளின் தலைவர்களும், ஒக்டோபர்

01ம் திகதி இம் மாநாடு நடாத்துகின்றமையாலோ என்னமோ அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சிறுவர் உரிமை மீறப்படாது பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

"காலத்தின் முதிர்வுதனைக் கச்சிதமாய் கழிப்பதற்கே கல்லறைக் கதவுகளை மனிதன் தட்டுகின்றான் என்பது தற்கால கவிஞனின் கவிதை வரி. இதை முதுமொழியாக மாற்றி "காலத்தின் வெறுப்பினிலே நாளுக்கு நாள் சிறுவர் மரண வீதமும், சிசுமரண வீதமும் அதிகரித்து வருகின்றதென்றால் சிறுவர்களாகிய நம் நிலையும், எதிர்கால உலகின் நிலையும் என்னவென்று கூற வார்த்தைகள் இருக்கா?

உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், சமூக ரீதியாகவும் கருவறை தன்னில் சிறையிருந்த சிசுவின் வளர்ச்சிக்காலம் சிறுவர் பராஜம் என்றே கூற வேண்டும். அப்படிப்பட்ட இனிமையான இக் காலத்தில் சிறுவர்களாகிய எம்மை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் சுழன்று வரும் பூமியை சுழல விடாது தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

"ஐக்கிய நாடுகள் சபை 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்கள்" என்று வரையறுத்து பறைசாற்றி நின்றாலும் எம் நாட்டில் கட்டாயக்கல்வி எல்லையாகவும், சிறுவர்கள் எனும் பொருளில் உள்ளடங்குபவர்களாகவும் 14 வயது வரையே வரையறுக்கப்பட்டுள்ளது.

எம்மைப் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சிறுவர்கட்கு உதவிக் கரம் நீட்டவென்று யுனிசெப், யுனெஸ்கோ போன்ற நிறுவனங்கள் முன்வந்தாலும், "கூடைகவிழ்ந்த விளக்காயும்", "பாசி படிந்த பவளத்தின் முத்தாயும்" இன்றும் இருளில் வாழ்ந்து கொண்டிருக்கும் "சோமாலியா, தன்சானியா" போன்ற நாடுகளில் வளர்ந்து வரும் பிரஜைகளும், வாழ்ந்து கொண்டிருக்கும் பிரஜைகளும் உள்ளனரே என்றால் அது நெஞ்சை நொருங்க வைக்கும் செயலாகவே எம்மால் நோக்கப்படுகின்றது.

எனவே கூண்டுக்கிளிகளை சுதந்திரமாய் பறக்க வழிசமைப்போம். "இன்றைய சிறுவர் நாளை தலைவர் எனும் முதுமொழிக்கிணங்க இன்றைய சிறுவர்களாகிய இப் பறவைகளை பறக்கவிடுவதன் மூலமே நாளை உலகிலும் ஆதர்.C.கிளாக்கும், அப்துல்கலாமும் தோன்றுவர் என்பது திண்ணம். எனவே சிறுவர் எனும் பறவைகளின் சிறகுகளை ஒடிக்கவிடாது சிறுவர் உரிமையைப் பேணி பாதுகாத்து நாளைய உலகை மேம்பாடடையச் செய்வோமாக. "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி" என்பதற்கிணங்க வாழ்வில் வெற்றிகாண்போம்.

-சுரேஸ் சுகந்தன்-

# தற்கொலை உணர்வுள்ளவர்களை கையாளும் வழிகள்



(தொடர்......)

## புலன்கள் மூலம் தூண்டப்படும் சூழல்
## (Sensory Envioronment)

குழந்தையானது பிறந்தவுடன் தன் புலன்கள் மூலமே சூழலை அறிந்து கொள்கின்றது. குழந்தைகள் கேட்கும் ஒலிகளின் தரம், பிள்ளை வெளிச்சத்தில் இருந்ததா, சரீர தண்டனைகள் எல்லாம் இதனையே சார்ந்தது.

## கலாச்சார சூழல்
## (Culture environment)

இங்கு கருதுவது எம் பண்பாடு, கலாச்சாரம் என்பனவாகும். சில குடும்பங்களில் பிள்ளைகள் மத நம்பிக்கையோடு வாழ்வார்கள். மேலும் பெரியோருக்கு கீழ்ப்படிதல், கலாச்சாரங்களை பேணிப் பாதுகாத்தல், போன்ற பண்பாடுகளை பின்பற்றுவார்கள். வேறு சிலர் இன்றைய நவநாகரீகத்திற்கு ஏற்புடையதாக வாழ்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு சூழலும் ஆளுமையை பாதிக்கும்.

இவற்றிலிருந்து வேறுபட்டதொரு நிலை ஆக்ரோஷம் இதற்கு அடிப்படையாக அமைவது கோபம் வராதவர்கள் எவருமே இல்லையென்றே கூறலாம். இக்கோபமானது உணர்ச்சியைத் தோற்றுவிக்கும். இங்கு உணர்ச்சி (Emotion) என்பது வேறு, உணர்வு (Feeling) என்பது அகநிலை அது சில எண்ணங்களின் நிலையாகும். ஊடலியல் சார்ந்தது திடீரெனத் தோன்றும். இதை கட்டுப்படுத்துவது கடினமாகும். மிக முக்கியமாக ஒன்பது உணர்ச்சிகள் உண்டெனக் கூறப்படுகின்றது. சந்தோஷம், கோபம், பயம், ஆச்சரியம், கவலை, ஏமாற்றம் என்பனவே அவையாகும்.

கோபமாக நடிப்பவர்களுக்கு கூட கோபத்துக்கான மாற்றம் ஏற்படும். இதயத்துடிப்பு, சுவாசவேகம், சுரப்பிகளின் வேகம் போன்றனவை யெல்லாம் மாற்றமடையும். கோபமானது மூன்று வடிவத்தில் தோற்றம் பெறும் அவையாவன:

1) நேரடியாகவே கோபம் வருதல்

2) வேறுபல உணர்வுகள் மூலம் தோன்றும் உதாரணமாக நோ வலி வேதனை விரக்தி.

3) தேவையானதொன்று கிடையாத போது கோபம் வரும்.

இந்நிலை அதாவது கோபம் வரும் போது உடற்றொழியல் பெரும் மாற்றம் நிகழும். முகம் சிவக்கும், குரல் மாறும், சிந்தனை மாறும், சுரப்புகள் அதிகரிக்கும், நிலை மாறும், தசை இறுக்கம் அதிகரிக்கும், நடத்தையில் மாற்றம் ஏற்படும், சொற்கள் தடுமாறும், இத்தகைய மாற்றங்கள் வேகமாக நிகழும்.

கோபமானது மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டு இயங்குகின்றது.

1) அறிகை சார்ந்தது (Cognitive)

2) உடற்றொழியல் சார்ந்தது (Psychology)

3) நடத்தை சார்ந்தது (behavioral)

அறிகை சார்ந்த குறைபாடுள்ள போது கோபம் வரும். ஒரு விடயத்தை உள்வாங்கும் முறைக்கேற்ப கோபம் வரும். சூழலிலுள்ள தூண்டி மூலம் பெறப்படும் விடயம் புலக்காட்சி பெறும் முறைக்கேற்ப கோபம் வேறுபடும்.

ஆபிரகாம் மாஸ்லோ தேவைக்கொள்கை பற்றிக் குறிப்பிடும் போது, கணிப்புத்தேவை, சுயதிறனியல் தேவை என ஏறுவரிசையில் நிறைவேற்றப்படும் என்கிறார். தேவைகள் தொடர்ச்சியானவை அத்தோடு அவை படிப்படியாக வளர்ச்சியடைந்து செல்கின்றன. ஒருவனுக்கு ஒரு தேவை நிறைவேறிய பின்பு மறுதேவை உடனடியாக எழுகின்றது. உதாரணமாக ஒருமாணவனை எடுப்போமாயின் முதலில் அவனுக்கு கல்வியிலே சித்தியடைய வேண்டும். பின்பு தான் கற்ற கல்விக்கேற்ப தொழில் பின்பு தனது வாழ்க்கைக்கு ஒரு துணை, குழந்தைகள், பொருளாதார வசதி வாய்ப்புக்கள், இப்படியே ஒரு தேவை பூர்த்தியாகப் பூர்த்தியாக மறுதேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. பிள்ளைகள் கோபமானவர்களாக இருக்கும் போது பெற்றோர் ஆசிரியர்கள் அவர்களை வழிநடத்த வேண்டும். பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டும். பிள்ளைகளை தர்க்கரீதியற்ற குழப்பமான நிலையில் வளர்க்க கூடாது. உதாரணமாக இரவில் வெளியே போனால் முனி அடிக்கும், மதியம் சுடலையால்

போனால் பேய் பிடிக்கும், சகுனம் பார்ப்பது போன்றன இவ்வாறு பொருத்தமற்ற நம்பிக்கைகள் மூலம் பிள்ளைகளை வளர்க்கக் கூடாது. பிள்ளைகளிடம் தன்னைப்பற்றிய சுய எண்ணக்கரு வளரும் வகையில் வளர்க்க வேண்டும். பிள்ளைகளை பற்றி மற்றவர்களிடம் இதுவொரு உணர்வில்லாதது எப்படி அடித்தாலும் அழாது பேசாமல் நிற்குது பார் என்று எல்லோர் முன்னிலையிலும் கூறுதல் கூடாது.

மனச்சோர்வான குடும்பத்திலுள்ள பிள்ளைகள் குடும்ப சண்டைகள், தாய் அல்லது தந்தை மட்டும் உள்ள குடும்பம், இருவரும் அற்ற குடும்ப பிள்ளைகள் போன்றோர் பலவிதமான மனச்சோர்வுக்குள்ளாகி இருப்பார்கள். இவ்வாறு பல்வேறு சிக்கல்களிலிருந்து ஆற்றுப்படுத்தும் போது தான் அவர்கள் நல்ல ஆளுமையுள்ளவர்களாக வளருவார்கள். பெற்றோருக்குப் பொறுப்பு பிள்ளைகளை வழிப்படுத்துவதிலேயுண்டு.

சில பிள்ளைகள் தாம் செய்யாதவற்றையும் மற்றவர்கள் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வித்தால் அது பெரிய விடயம் எனக் கருதுவார்கள். இவர்கள் மற்றவர்களைத் தம்முடைய முழு ஆளுமைக்குள் வைத்திருக்க வேண்டும். அவர்களுடைய துன்பம் பற்றிக் கவலையில்லை. தன்னை பற்றி பிறர் எதைக் கதைத்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அல்லது அதைப்பற்றி கவலைப்படுவதுமில்லை. இதுவும் ஒரு வகையான வன்முறை உணர்வு. மேலும் பெற்றோர் ஆசிரியர்களின் விளக்கமற்ற உத்தரவும் பிள்ளைகளிடம் வன்முறையைத் தூண்டும்.

பிள்ளைகள் கட்டிளமைப்பருவ வயதை அடையும் போது குடும்ப பிணைப்புகள் அற்றுப் போகும். அவ்வேளை பெற்றோரும் ஆசிரியரும் அப்பருவச் செயற்பாட்டை அறிந்து தம் பிள்ளைகளுடன் உள்ள பிணைப்பை இறுக்கமாக்க வேண்டும். தமது எண்ணங்களைச் சுலபமாக சொல்லக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும். அத்தோடு கட்டுப்பாடு விதிக்கும் போது வளைந்து கொடுக்காத கட்டுப்பாடாக அமையக்கூடாது. பிள்ளையின் நிலைமைக்கேற்ப வளைந்து கொடுக்க வேண்டும். உதாரணமாக பிள்ளைகளை கட்டாயமாக ஒவ்வொரு நாளும் படிக்க 7 மணிக்கு மேசைக்கு வர வேண்டும் எனக் கூறுவது.

பிள்ளைகள் தவறு செய்தால் அதனையே திரும்ப திரும்பச் சொல்லி குற்றஞ்சாட்டக்கூடாது. இவ்வேளைகளில் அத்தவறை

பிள்ளைகள் மீது சுமத்தாது சூழலின் மீது சுமத்துவதையே சில பெற்றோர்கள் பின்பற்றுவார்கள்.

எனவே கோபம் என்கிற உணர்ச்சி மற்றவர்களுக்கு தீமை தரும் வகையில் வெளிப்படும் போது அது ஆக்ரோஷம் எனப்படும். அவர்களுள் இருக்கும் போது கோபம் ஆக்ரோஷ ஆளுமை என ஒன்றுண்டு. கை காட்டிக் கதைப்பது, கிட்ட வந்து கதைப்பது, முதுகில் தட்டிக்கதைப்பது ஒரு வித்தியாசமான பார்வை பார்ப்பது போன்றன இதற்குள் அடங்கும். இவ்வாறு ஆக்ரோஷ உணர்வுகள் ஏற்படக்காரணம் அவர்களுடைய வாழ்வில் ஏதாவதொன்று தவறிவிட்டது என்றே கூறலாம். ஆக்ரோஷ உணர்ச்சிக்குரிய சில உளப்பரிகாரங்கள் வருமாறு.

1. இருகைகளிலும் வெண் கட்டியைக் கொடுத்து அவர்களை மனம் போன போக்கில் கீற விட வேண்டும்.
2. பெரு விளையாட்டுக்களில் பங்குபற்றச் செய்தல், உதாரணம் உதைப்பந்து, கைப்பந்து
3. நாடகங்களில் நடிக்க விடுதல்
4. வெறுமையாக கதிரையை வைத்துவிட்டு அதில் இருப்பவர்களுக்குப் பேசுவது போல் பேச விடுதல்.
5. உளவளத்துறையை நாடி ஆலோசனை கொடுக்கலாம்.

-த.ஸ்ரீகமலநாதன்-
ஆசிரியர்: யா/மானிப்பாய் மெமோறியல்
ஆற்றுப்படுத்துனர் :- அகவொளி



# இளைஞர் தினம்

“இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்” என்பது பழமொழி”இன்றைய இளைஞர்கள் இன்றைய தலைவர்கள்” என்பது புதுமொழி.

மனிதனுடைய தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் நான், எனது வீடு என்ற நோக்கோடு வாழுகின்றான். இதைமாற்றி நாங்கள், எங்களுடைய வீடு எங்களுடைய சமூகம் , எங்களுடைய நாடு என்று சிந்திக்கும் இளைஞர்களை உருவாக்கும் சிந்தனையோடு 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் இவ் இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் பல பொதுச் சேவைகளைச் செய்து வருகின்றனர் அதில் இளைஞர் தின நிகழ்வும் அடங்கும்.

இளைஞர் தினமானது 04.12.2011 அன்று காலை 9.00 மணிக்கு “எம்மை மாற்றி உலகை மாற்றுவோம்” எனும் கருப்பொருளில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகரசபைத் தலைவரும் சட்டத்தரணியு மாகிய சபா.ரவீந்திரன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு.பி.கிருஸ்ணானந்தன் அவர்களும் பருத்தித்துறை மறைக்கோட்ட இணைப்பாளர் அருட்தந்தை எமில்போல் அவர்களும் வருகை தந்திருந்தனர். அத்தோடு அருட்தந்தையர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரர்கள், ஏனைய இளையோர் கழகங்கள் , பெற்றோர்கள், மாணவர்கள், போன்றோரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக வருகை தந்தவர் களுக்கு மாலை அணிவித்து பூச்செண்டு வழங்கி இளைஞர்களினால் வரவேற்கப்பட்டது. இதில் வரவேற்புரை, வரவேற்பு நடனம், தலைமையுரை, தனிநடனம், பேச்சு, கவிதை, முறிவு நடனம், இயக்குனர் உரை, பாடல், தாளலயம், குழுநடனம், குள்ளநடனம், தனிநடிப்பு, நாடகம் பிரதம விருந்தினர் உரை போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது.

இந் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக இளைஞர் கழகங்களிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவித்ததோடு சிறந்த பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டது. மதியம் 12.30 மணியளவில் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன.

இந் நிகழ்விற்கு வருகை தந்த பெரியோர்கள், அருட்தந்தையர்கள் ஏனைய கழக உறுப்பினர்கள் அனைவரும் அஞ்சலியக இளைஞர்களது ஆற்றல்கள், செயற்பாடுகள், திறமைகளைக் கண்டு வியந்தது மட்டுமல்லாது இளைஞர்களையும் யுவதிகளையும் வழிநடத்திச் செல்லும் அருட்தந்தையர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

-இ.மேகலா-
உளசமூகப்பணியாளர், அஞ்சலியகம்.

# வாசகர் பார்வை



அஞ்சலி வைகாசி,ஆவணி இதழ் ஆளுகை மிக்கதாய் இருப்பதை கண்டு மகிழ்வுற்றேன்.

இன்று எமது மக்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைவாகவேயுள்ளது. வாசிப்பே ஒரு மனிதனை முழுமையாகச் செய்கின்றது. அஞ்சலியும் இளைஞர்களிடையே தன்னால் இயன்றதை செய்து வருவது வரவேற்கத்தக்கது.

பல்துறை சார்ந்த ஆக்கங்களை காணக்கூடியதாய் இதழ் இருக்கின்றது. மனச் சிதைவுகளும் விரக்தியுமே இன்று எமது சமூகத்தில் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது இதன் உச்சமாக தற்கொலைகள் பெருகி வருகின்றது. பன்னிரண்டு வயதுப் பையன் பரீட்சையில் தோல்வி அடைந்ததினால் தற்கொலை செய்கிறான் என்றால் எமது கல்வியும், கல்வியாளர்களும் சமூகத்தை எங்கு கொண்டு செல்கின்றனர் என்ற கேள்வி தவிர்க்க முடியாதது.

ஒருவரிடம் இருக்கும் திறமையை ஊக்குவித்து அவனை அத்துறையில் பரிமளிக்க செய்வதை விட்டு விட்டு அவரிடம் இல்லாததை சுட்டிக்காட்டி அவரை நிலைகுலைய செய்வதிலேயே இச் சமூகம் முன் நிற்கின்றது. ஒப்பிடுதல் என்பது எவ்வகையில் எமக்கு உதவும் என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை.

வாழ்வில் அர்த்தங்களை புரியாமல் டாம்பீகமான வாழ்வையே நமது சமூகம் விரும்பி நிற்கின்றது. எளிமையான நம் வரவுக்குள் வாழ்வதை நாம் மறந்து விட்டோம் உழைப்பதை விட கையேந்துவதையே எமது பழக்கமாக்கி விட்டோம். தமக்கு கிடைக்கும் நிதியுதவியை பயன்படுத்தி பொருளாதாரத்தில் நிறைவடைவதை விட்டு விட்டு தேவையில்லா விரையங்களில் செலவு செய்வதையே மேற்கொள்கின்றார்கள். அண்மையில் எமது அயலவர் ஒருவர் வங்கியில் கடனெடுத்து ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்த தன் சகோதரியின் மகளுக்கு மடிக்கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்தார். இதனால் அந்த பிள்ளைக்கு என்ன பயன்பாடு கிடைக்கும் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வகை டாம்பீகமே இன்று வாழ்வாகி விட்டது.

மேற்குறித்த விடயங்கள் அதனால் ஏற்படும் பலா பலன்கள் பற்றிய அருமையான கட்டுரைகளை இதழ் கொண்டிருப்பது மாத்திரமல்ல சிறுக சொல்லி விளக்கி நிற்பது வரவேற்கத்தக்கது. வாழ்த்துக்கள்.

சிறுகதைகள் நீண்டு அதன் இறுக்கத்தை இழப்பது வரவேற்கத்தக்கதல்ல. சிறுகதை தோவில் ஏற்ற ஒழுக்கத்தை கடைப்பிடிக்கவும்.

-இ. து. குலசிங்கம்-
சமூக சேவையாளர்

**பொது அறிவிற்குரிய விடைகளை இணைக்கப்பட்டுள்ள தாளில் எழுதி அனுப்புங்கள்**
**(நிழற் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

| | |
|---|---|
| அஞ்சலியகம்,<br>நெல்லண்டை வீதி,<br>தும்பளை,<br>பருத்தித்துறை. | Anjali Aham,<br>Nellandai Road,<br>Thumpalai,<br>Point Pedro, |

**சுடர் - 02 சஞ்சிகைக்கான விடைகள்**

1) ஓகஸ்ற் முதல் ஞாயிறு 2) இலங்கை 3) 17 தடவைகள்
4) கரும்பு 5) திபெத்

## சுடர் - 03 சஞ்சிகைக்கான பொது அறிவுப்போட்டி

01) உரோமன் இலக்கத்தை பயன்படுத்தி எழுத முடியாத இலக்கம் எது?
02) சர்வதேச புத்தக தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
03) மழை வருவதை முன்கூட்டியே அறியக்கூடிய விலங்கு எது?
04) புல் இனத்தின் மிகப்பெரிய தாவரம் எது?
05) "A3" காகிதத்தின் நீள, அகலங்களை மில்லிமீட்டரில் தருக?

சுடர் 1 சஞ்சிகைக்கான சரியான விடைகளை எழுதிய 10 மாணவர்களில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்ட மாணவி

**சி.சிவலோஜினி**

### சரியான விடைகளை எழுதிப் பாராட்டினைப் பெறுவோர்:

யோ.யசிக்கா - (தரம் -7) யா/பரமேஸ்வர வித்தியாலயம் - வெற்றிலைக்கேணி
வி.அஸ்வின் - யா/பரமேஸ்வர வித்தியாலயம் - வெற்றிலைக்கேணி
சூ.அருள்சீலி - (தரம் - 11) - லங்கா மாதா மடம், அச்சுவேலி
ப.சுகன்யா - (தரம் - 10) - லங்கா மாதா மடம், அச்சுவேலி
ஞா.பிளாசினா - (தரம் - 11) - லங்கா மாதா மடம், அச்சுவேலி
ர.ரம்மியா - லங்கா மாதா மடம், அச்சுவேலி
பி.நிறோஜினி , சு.சுகீர்தா , U.றெபேக்கா



## கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்

### இனிய வாசக அன்பர்களே!

புதுப்பொலிவோடு புலர்ந்திட்ட புத்தாண்டை
புன்னகையுடன் வரவேற்கின்றோம்.
இவ்வாண்டில் எம் மக்கள் இன்னல் களைந்து
இன்பமுடனும் அல்லல்கள் நீங்கி அன்புடனும்
ஓர் தாய் மக்களாய்
ஒன்றிணைந்து வாழ வாழ்த்துகின்றோம்.

-அஞ்சலி குழுமம்-

அச்சமைப்பு : S.P.M வி.எம்.றோட், பருத்தித்துறை. T.P: 0774966997